

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## பங்குனி - சித்திரை

மலர் 11 ஏப்ரல் - 2022 இதழ் 4

### பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| வண்டு ஸ்தோத்ரம் | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 9 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 12 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| முகாம் நிகழ்ச்சிகள் | 16 |
| ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 3 | 21 |
| கீதையும் குறளும் | 23 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 30 |
| சித்திரை மாத விசேஷ தினங்கள் | 33 |
| கிருஷ்ண யஜுர் வேதத்தின் தனிச்சிறப்பு | 34 |
| ப்ரபோத சிந்தமாணி | 38 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 40 |
| புராணக்கதை | 42 |
| மகாபாரத சுருக்கம் | 44 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்








# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்

வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

**ஜங்கி பீஜம் வர்ஷ்டா பர்ஜன்ய: பக்தா ஸஸ்யம் ஸுபிப்பலா ஓஷதய;**
**ஸ்வதிசரேணேயம் ஸூபஸதனோ அக்னி:ஸ்வத்யக்ஷமந்தரிக்ஷம்**
**ஸுபாவ; பவமான: ஸூபஸ்தானா த்யௌ: சிவமஸௌ தபன்**
**யதாபூர்வம் அஹோராத்ரே பஞ்சதசினோ அர்தமாஸாஸ்த்ரியம்ஸினோ**
**மாஸா: க்ல்ருப்தா க்ருதவ: ஸாந்த ஸம்வத்ஸர: (தைத்ரீய ஸம்ஹிதை 7.5.20)**

*விதை ஜீவனுள்ளதாயிருக்க, பர்ஜன்யன் மழை பெருக்க, விதைகள் அனைத்தும் பக்வமாக, ஓஷதிகள் பலிதமாக, பூமி நல்லாள் நடக்க இசைய அக்னி உபாஸிக்க எளியதாக இருக்க, அந்தரிக்ஷம் பார்க்க எளியதாக இருக்க, காற்றுத் தேவன் நம்மை புனிதமாக்க, ஸ்வர்க்கம் எளிதில் அடையக் கூடியதாக இருக்க, சுட்டெரிப்பவன் சிவமாக விளங்க, அஹோராத்ரம் முன்போல விளங்க, பக்ஷங்கள், மாஸங்கள், பருவங்கள் ஒழுங்காய் ஒழுக, இந்த வருஷம் (ஸம்வத்ஸரம்) சாந்தமாக இருக்கட்டும்.*

★★★★

*தாடகையை அறுத்து வதை செய்யும்போது ஏற்பட்ட ரத்த வெள்ளத்தால் மூழ்கியதும் சுபாகுவின் இதயத்தில் நுழைந்தும் வெட்டப்பட்ட கரனுடைய கொழுப்பாகிய சந்தனக் குழம்பைப் பூசிக்கொண்டதும், மாரீசனுடைய குடலை ஏகாவளி என்னும் மாலை ஆபரணமாக்கிக் கொள்வதில் ருசி உடையதும், வாலியின் இதய பத்மத்தை அபகரித்து பத்மாஹாரமாகச் செய்துகொண்டதும் ராவணனின் ப்ராணங்களை ஆஹாரமாய்க் கொண்டதும் ஸகல ஜகத்தையும் காக்க வல்லதுமான ஸ்ரீ ராமபாணம் நம் யாவரையும் காப்பாற்றட்டும்.*

*பக்தர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கும் விஷயத்தில் கல்பக வ்ருக்ஷம் போன்றதும், ஸமுத்ரத்தை வற்ற அடிப்பதில் வாடவாக்னி போன்றதும், அசுரர்கள் என்ற வேஷத்தில் விளையாட்டாய் பரவியுள்ள பலத்த இருட்டை நீக்குவதில் ஸூர்யன் போன்றதும், ஏழு ஸால மரங்களை எளிதில் துளைத்ததும் ஸ்ரீராமனுடைய தோளில் இருக்கும் அம்பறாத்தூணியாகிய புற்றில் வசிக்கும் நாகராஜன் போன்றதுமான ஸ்ரீ ராம பாணம் நம் யாவரின் க்ஷேமத்தையும் வளர்க்கட்டும்.*

# ஆசிரியர் பக்கம்

द्रुमा सपुष्पा: सलिलम् सपद्मम् स्त्रिय: सकामा: पवन: सुगन्धि: ।
सुख: प्रदोषा: दिवसाच्च रम्या: सर्वम् प्रिये चारुतरम् वसन्ते ।।

த்ருமா ஸபுஷ்பா: ஸலிலம் ஸபத்மம் ஸ்த்ரிய: ஸகாமா: பவன: ஸுகந்தி:
ஸுகா : ப்ரதோஷா திவஸாச்ச ரம்யா: ஸர்வம் ப்ரியே சாருதரம் வஸந்தே ।।

மரங்கள் புஷ்பங்களுடனும், தடாகங்கள் தாமரைகளுடனும், பெண்கள் காமத்துடனும் இருக்க, காற்று நறுமணம் கமழ்கிறது, மாலை வேளை சுகமாயிருக்க, பகற்பொழுதும் ரம்யமாயிருக்க, எல்லாம் வஸந்தத்தில் அழகுடன் உள்ள ப்ரியே.

இது காளிதாஸரின் வஸந்தருது வர்ணனை. இன்றைய தேவை இதுதான். இளவேனிற் காலத்தில் அதாவது வஸந்தத்தில் புதுவருடம் பிறக்க எல்லாம் மகிழ்ச்சி தருபவனவாய் இருக்க எல்லோரும் மகிழ்வார்கள். கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் கொரொனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிர்பலிகள் கொடுக்கப்பட்டு, மன உளைச்சலும், சோர்வும் உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஸமயத்தில் பிறக்கும் வருடம் வ்யாதிகள் இல்லாததாய் இருக்க நினைப்பது ஆச்சர்யமில்லை. சரியானதும் கூட. ''If winter comes can spring be far behind'' என்று ஷெல்லி கவி கூறுவான். மிகக் கடுமையான குளிர்காலம் வந்தாலும் வஸந்தம் வராமலாப் போகும் என்று ஒரு நம்பிக்கையைக் காட்டுவார் அவர். நாமும் வ்யாதி தாக்கம் பெற்ற வருடம் போய் நல்ல வருடம் வராதா என்று எதிர்பார்க்கிறோம்.

அந்த எதிர்பார்ப்பு பொய்யாகக் கூடாது என்று இறைவனை வேண்டுகிறோம். இயற்கைதானே நம் ப்ரார்த்தனை. புது வருடங்கள் யாவும் வஸந்தத்தில் தான் தொடங்கும். வேதகாலம் தொட்டு இது கடைபிடிக்கப்படுகிறது. இதற்கு மாறாக மேற்கத்திய கலாசாரம் மார்கழியில் புது வருடத்தைக் கொண்டாடும். சௌகர்யத்திற்காக நாம் ஏற்றுக்கொண்டாலும் நமக்கு புது வருடம் வஸந்தத்தில் அதாவது சித்திரையில் தான். இளவேனில் பருவம் அதைக் கொண்டு வரும். இதை வேதம் அழகாகக் கூறும்.

''பல்குனீ பூர்ணமாஸோ முகத ஏவ ஸம்வத்ஸரமாரப்ய தீக்ஷந்தே, சித்ராபூர்ணமாஸே தீக்ஷேரன் முகம் வா ஏதத் ஸம்வத்ஸரஸ்ய'' தீக்ஷை எடுப்பவர்கள் பங்குனீ மாஸத்தில் எடுத்துக் கொள்ளலாம். அது ஆரம்பமாக இருக்கலாம். சித்ரா மாஸமே புது வருடத்தின்

முகம்'' இப்படி வேத வாக்யம் காட்டும் சித்திரை மாஸத்தை சிறப்பித்து எங்கும் எதிலும் மகிழ்ச்சியைக் காட்டுகிறார் காளிதாஸர். விகாரி, சார்வரீ, ப்லவம் இப்படி மூன்று வருடங்கள் அவைகளின் பெயர்களுக்கு ஏற்றாற் போல் தங்களுடைய துஷ்டதனத்தை உலகெங்கும் காட்டி விட்டன.

விகாரி இயல்பான வாழ்வை மாற்றியது. சார்வரீ இருட்டாக ஆக்கியது. ப்லவம் கொள்ளை நோயால் வெள்ளமாக்கியது. இனி வாழ்வில்லை என்று நினைத்திருக்க ''சுபக்ருத்'' (நல்லதைச் செய்யும்) புது வருடம் பிறக்கப் போகிறது. எல்லா நலங்களையும் மன மகிழ்ச்சியையும் தரப்போகிறது. சுபக்ருத் அல்லவா மன நோய்களும் உடல் வ்யாதிகளும் நீங்கி மக்கள் அனைவரும் நலமுடன் வாழ ''ஸர்வம் சாருதரம் '' (எல்லாம் அழகாக இருக்க) என்ற கூற்றின்படி இறைவன் அருள வேண்டும் . இப்புது வருடத்தில் எல்லா பருவங்களும் வஸந்தமாக இருக்க வேண்டும் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர

## வருந்துகிறோம்

காமகோடி ப்ரதீபத்தின் நிறுவனரும், பல வருடங்களாக இதழ்களை வெற்றிகரமாக நடத்தியவரும், காமகோடி கோசஸ்தான அதிபரும், என் ஆத்ம நண்பருமான **என். சிவராம கிருஷ்ணன்** அண்மையில் மறைந்தார் என்பதை கேட்டு வருந்துகிறோம்.

அன்னாரின் பரந்த உள்ளம் இல்லையேல் ப்ரதீபம் இப்போது வந்திருக்காது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பகவானை ப்ரார்த்திக்கிறோம்.



# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## பக்தி - த்வைதம் கூறும் அத்வைத ஆசார்யர்

ஜீவன் - ப்ரஹ்மம் என்ற பேதம் அடிபட்டுப் போன உயர்ந்த ஞான அநுபவ நிலையிலே, இருப்பதெல்லாம் ஒரே 'ஸத்' வஸ்து தான் என்றாலும் லோக தசையில் இருக்கிற வரை ஞானாநுபவம் வருகிறவரை, ஆள்கிறவனான மஹா சக்தனாக ஈச்வரன் என்று ஒருவனும், அவனுக்கு வேறு மாதிரி ஆளப்படுகிறவர்களான அல்ப சக்தர்களான அநேக ஜீவர்களும் தோன்றத்தான் செய்கிறார்கள். இதே ஸ்திதி யில் 'நானும் ஈச்வரனும் ஒன்று' என்று இந்த அல்ப சக்தன் அந்த ஸர்வ சக்தனோடு அபேதம் கொண்டாடிக் கொண்டால் தப்பு.

'அப்படியானால் அத்வைதம் தப்பா?' என்றால் அப்படியுமில்லை.

இதென்ன குழப்பமாயிருக்கிறதே என்று பார்த்தால் ஆசார்யாள் ரொம்ப அழகாகத் தெளிவுபடுத்தி பதில் சொல்கிறார். ஸமுத்ரமும் அலைகளும் ஒன்றா, வேறு வேறா? மேலே பார்த்தால் வேறேதான். உள்ளே போனால் ஒன்று தான். உள்ளுக்குள்ளே அலையே இல்லை. அந்த மாதிரி உள்முகமாகப் போய்விட்டால் ஜீவாத்மாக்கள் என்ற பல அலைகளே இல்லாமல் ஒன்றேயான பரமாத்ம ஸாகர அடி மட்டம் மட்டும் தான் அத்வைதமாக இருக்கிறது. அந்த ஸமுத்ரமேதான் மேல் மட்டத்தில் பல அலைகளாகத் தெரிகிறது. ஏக ஸமுத்ரத்தில் காற்றினால் அநேக அலைகள் உண்டாகிற மாதிரி, மாயையால் வெளிமுகப்படுகிறபோது, ஒரே பரமாத்மாவில் பற்பல ஜீவாத்மாக்கள் உண்டான மாதிரி இருக்கிறது.

இந்த ஸ்திதியில் ஒவ்வொரு அலையும், ''நானே பூர்ண ஸமுத்ரம்'' என்று சொன்னால் தப்புதானே? அலைகளான தாங்கள் அனைவரும் ஒரே ஸமுத்ரத்தைச் சேர்ந்த அதன் சிறுசிறு அம்சங்கள் என்பது தானே ஸரி? அதுபோல, அத்வைதாநுபூதியில் இருப்பது ஒன்றே என்றாலும்-**ஸத்யபி பேதாபகமே**-விவகார தசையில் ஜீவர்களான நாங்கள்

எல்லோரும், எப்படி ஸமுத்ரமில்லாமல் அலைகள் இல்லையோ அப்படி உன்னையன்றி இருப்பு என்பதேயில்லாமல் முழுக்க முழுக்க உன்னைச் சேர்ந்தவர்களே!'

**நாத தவாஹம் ந மாமகீனஸ்-த்வம்.**

நாத - எங்களை ஆள்கிற ப்ரபுவே !

தவாஹம், தவ, அஹம்; அஹம் - நான்; தவ - உன்னுடையவன். நான் உன் உடைமை.

'ந மாமகீந : த்வம்' என்றால் த்வம் - நீ, மாமகீந:- என்னுடையவன்; ந - அல்ல. நீ என்னுடைமை அல்ல.

ப்ரபுவே! நான் உன் உடைமை. நீ உடைமையாளன், நீ என்னைச் சார்ந்து, என் உடைமையாக இருப்பவனில்லை. அலையில்லாமல் சாந்தமாக ஸமுத்ரம் இருக்கலாம். உள்ளே எப்போதும் அது அப்படியிருப்பது தான். ஜீவர்களும் ப்ரபஞ்சமும் இல்லாமல் நீ இருக்கலாம். ஆனால் ஸமுத்ரமில்லாமல் அலை இருக்க முடியாது. அது போல், நீ இல்லாமல் நான் இல்லவே இல்லை. ஸமாதி நிலையில் நான் நீ பேதமில்லாத ஏகத்தை நான் அநுபவிக்கிறேன் என்பதால் வ்யவஹார தசையில் நம்மை இரண்டாகப் பார்க்கிறபோது, நீதான் என் உடைமை, நீதான் என்னைச் சார்ந்திருப்பவன் என்று நினைத்தால் அது எப்பேர்ப்பட்ட அஸம்பாவிதம் தெரியுமா? ஸமுத்ரம் தான் அலையைச் சேர்ந்தது; அலை ஸமுத்ரத்தைச் சேர்ந்ததில்லை என்று நினைக்கிறமாதிரிதான்.

**ஸாமுத்ரோ ஹி தரங்க: க்வசந ஸமுத்ரோ ந தாரங்க :**

தரங்கம் என்றால் அலை. (ஜல தரங்கம் என்கிறோம்.) அலை தான் ஸமுத்ரத்தின் உடைமை. ஸமுத்ரம் அலையின் உடைமை இல்லை - ஒருகாலும் இல்லை. 'க்வசந' - ஒருகாலும். தப்பித் தவறிக்கூட, பரமாத்மா ஜீவாத்மாவைச் சார்ந்திருப்பதாக நினைத்துவிடப்படாது என்பதற்காக, ''ஒருகாலும் இப்படியில்லை'' என்று அழுத்தமாக ''க்வசந'' போட்டுக் காட்டியிருக்கிறார். அத்வைதத்தை வ்யவஹார உலகத்திலே தப்பாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்ற அக்கறையால், கவலையால் இப்படி அழுத்திச் சொல்லியிருக்கிறார். 'எல்லாம் உன் உடைமையே!' என்று தாயுமானவர் பாடினார். உடைமைக்கு 'ஸ்வம்' என்று பெயர். எல்லாவற்றுக்கும்-ஸ்வம் அனைத்துக்கும். உடைமையாளன் தான் 'ஸ்வாமி.' அதனால் தான் ''உடையவர்'' என்று வைஷ்ணவர்கள் சொல்கிறார்கள். மற்றவர்கள்கூட முன்காலத்தில் கபாலீச்வர ஸ்வாமி, நாகேச்வர ஸ்வாமி என்பது போன்ற பெயர்களை 'கபாலீச்சுரமுடையார்',

‘திருநாகேச்சுரமுடையார்’ என்பது போல ‘உடையார்’ சப்தத்தால் தான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முடிவான அநுபவம் என்று வருகிறபோது, ஆசார்யாள் சைவ வைஷ்ணவ ஸித்தாந்தங்களுக்கு – மாறாக ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே என்று ஸித்தாந்தம் செய்த போதிலும், யதார்த்த நிலையை, வ்யவஹார தசையைக் கருத்தில் கொண்டு, இந்த ச்லோகத்தைப் பண்ணும்போது. நடைமுறை வாழ்க்கையில், தானே ஈச்வரன் என்று தப்பாக எவனும் நினைத்துவிடாமல், அவனது லவலேச அம்சமே தான் என்று அடங்கிப் பணிந்து இருக்க வேண்டும் என்று உபதேசிக்கிறார். சைவ – வைஷ்ணவ பக்திமான்களுக்குக் கொஞ்சமும் பின்வாங்காமல் அவர்களைப் போலவே நைச்யமாக, எளிமையாக பகவானை ப்ரார்த்தனை பண்ணுகிறார். ‘ஷட்பதீ’ ஆரம்பத்தில் அவர் வேண்டிய விநயத்துக்கு அவரே விக்ரஹமாக இருந்து கொண்டு ப்ரார்த்தனை பண்ணுகிறார்.

ஆசார்யாள் எப்படிக் கொள்கைப் பிடிவாதமேயில்லாமலிருந்தார் என்று இங்கே தெரிகிறது. அவரது ஸித்தாந்தம், லக்ஷ்யம் என்னவென்றால் அத்வைதம். ஆனால் அந்த ஸித்தியின் அந்தத்துக்கு, லக்ஷ்ய நிலைக்கு போகாமல், ஈச்வரன் – ஜீவன் என்று த்வைதமாக இருக்கும் போது, ஜீவனைப் பார்த்து, ‘அடா, அப்பா! அத்வைதத்தை இங்கே கொண்டுவந்து விடாதே!’ என்று அவரே தடுக்கிறார். த்வைதிகளை விட ஸ்ட்ராங்காக அத்வைதத்தை அந்தண்டை கொண்டு போகச் சொல்கிறார் !

பரமாத்மாவாகவே இருப்பதிலே ஒரு ஆனந்தமென்றால், அவனை பக்தி பண்ணிக் கொண்டிருப்பதிலும் ஒரு ஆனந்தம் இருக்கிறது. பக்தி பண்ணும்போது, ‘அவனே நாதன்; நம்மை உடைமையாகக் கொண்டவன்; அவனிடம் துரும்பாகப் பணிந்து கிடக்க வேண்டியவர்களே நாம்’ என்று புரிந்து கொண்டால் தான் அந்த ஆனந்தம் கிடைக்கும். ஆகையினால் தான் ராமாநுஜருக்கும் மத்வருக்கும் கொஞ்சங்கூடப் பின்னே தங்காமல் அத்வைத பரமாசார்யாளும், ‘நீ மஹா ஸமுத்ரமென்றால் நான் அதிலே ஒரு சின்ன அலை தான். நீயன்றி நானில்லை. நான் உன் ஸொத்து தான்’ என்று ஒரே பணிவாகச் சொல்கிறார்.

**ஸத்யபி பேதாபகமே நாத தவாஹம் ந மாமகீநஸ் – த்வம் ।**
**ஸாமுத்ரோ ஹி தரங்க : க்வசந ஸமுத்ரோ ந தாரங்க:**

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

# இந்து சமயத்தின் பெருமை

## தேவேந்திர குலம்



இந்த ஊரிலேயே தேவேந்திர குலம் என்ற அமைப்புகளின் காலனிகளுக்குச் சென்றேன். சொற்பொழிவுகளும் செய்தேன். இது போன்ற பல தேவேந்திரக் குல வகுப்பினர்களையும் சந்தித்திருக்கிறேன்.

எல்லா இனத்தவர்களின் கோயில்களுக்கும் சென்று இருக்கிறேன். நம்முடைய இந்து சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கும் எந்த ஒரு வகுப்பினர் கூப்பிட்டாலும் அங்கெல்லாம் சென்று கொண்டுதான் இருக்கிறேன்; அருளாசியும் வழங்கிக் கொண்டு தான் இருக்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால் சமுதாயப்பணி செய்யும் அளவிலே, கடையநல்லூரிலே ஒரு திருக் குளத்தைச் செப்பனிடும் துவக்க விழாவிற்கு என்னை கூப்பிட்டிருந்தார்கள். அங்கே முஸ்லிம் எம்.எல்.ஏ. நண்பர்கள் கூட வந்திருந்தார்கள். அவர்களும் சேர்ந்து எங்கள் பக்கத்திலே அமர்ந்து கொண்டு அவர்களுடைய சட்டசபைத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்கி ஆதரவு அளித்து கலந்து கொண்டார்கள்.

‘பொதுப்பணி’ என்று வந்துவிட்டால் எல்லோருமே ஒற்றுமையாக இருக்க வேண்டும். வழிபாட்டு முறை அவரவர்க்கு என்று தனித்தனியாக இருந்தாலும், பொதுப்பணி என்று வந்துவிட்டால்- அந்த வேறுபாடுகளை எல்லாம் மறந்துவிட்டு ஒன்றுகூட வேண்டும் என்று சொன்னேன்.

அப்படி எல்லோரும் தங்கள் மதக் காரியங்களையும், வேறுபாடுகளையும் தங்கள் வீட்டோடு வைத்துக் கொள்ள வேண்டும்.

பொதுப்பணி வரும்போது அனைவரும் ஒன்றாகி விட வேண்டும். அதனால்தான் நம் சமயத்திலே திருவிழாக்களையும், தேரோட்டங்களையும் வைத்திருக் கிறார்கள். அந்தத் திருவிழாக்களில் அனைவரும் ஒன்றுகூடி ஆனந்தமாக இருக்கவேண்டும்.

'ஊர்கூடித் தேர் இழு' என்பார்கள். ஊர்கூடி எல்லா மக்களும் சேர்ந்து தேர் இழுத்து மகிழும் பழக்கம் திருவிழாக்களில் இருந்தது. ஆனால் இன்றைக்கு தேரை இழுப்பதற்குகூட மிஷின் வந்து விட்டது. மோட்டார் வாகனத்தில் கட்டி இழுக்கிறார்கள்.

அன்றைக்கு அதிகப் படிப்பு இல்லை. ஆனால் அனுபவம் இருந்தது. அதனால் விஷயத்தைப் புரிந்து கொண்டார்கள். அதனால் வாழ்க்கையும் அன்றைக்கு நலமாக இருந்தது.

இன்றைக்கு படிப்பறிவு வந்துவிட்டது. படிப்பறிவினால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. நல்ல விஷயங்களைப் படிக்க வாய்ப்பும் உண்டு. படிப்பறிவினால் புத்தி-சக்தி பெருகி, அதன் மூலமாகக் குழப்பமும் அதிகமாக ஏற்பட்டுவிட்டது.

ஒரு காலத்தில் குழப்பம் இல்லாத வாழ்க்கை இருந்தது; படிப்பறிவு இல்லை. ஆனால் இன்றைக்குப் படிப்பறிவு வந்த பிறகு எல்லாமே ஒரே குழப்பமாகி விட்டது. அரைகுறைப் படிப்பினால் குழப்பம் ஏற்பட்டு, அப்படிப் படித்தவர்களது சொல்லைக் கேட்டு மக்களும் குழம்பிப் போய்விடுகிறார்கள்.

இந்த மாதிரி எல்லாம் யாரும் இனிமேல் குழம்பக் கூடாது என்பதற்காகத்தான் இப்படிச் சிறிய அளவிலே ஒரு மாநாட்டை நடத்தச் சொன்னோம்.

## பஞ்சபாண்டவர்கள்

மகாபாரதத்திலே பஞ்சபாண்டவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு எதிரிகள் ஜயத்ரதனையும் சேர்த்து 101 பேர் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் மண்ணின் மீதும், அதிகாரத்தின் மீதும், ஆசைப்பட்டு பஞ்சபாண்டவர்களை எல்லாம் நாட்டை விட்டு துரத்தும் காரியத்தைச் செய்தார்கள்.

அப்படி விரட்டப்பட்ட பஞ்ச பாண்டவர்கள் காட்டின் வழியே சென்றுகொண்டு இருந்தார்கள். அப்போது துரியோதனன் அதே காட்டுவழியாகத் தனது படைகளுடன் சென்றுகொண்டு இருக்கிறான். அங்கே ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்திலே பலரும் அப்போது

குளித்துக்கொண்டு இருந்தார்கள். அதிலே துரியோதனனும் இறங்கி நீராடுவதற்காகச் சென்றான். அந்த சமயம் அங்கே சில கந்தர்வலோகத்துத் தேவர்களும் வந்து இறங்கிக் குளித்துக் கொண்டு இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

அவர்களோடு நீராடும் போது துரியோதனன் தவறாக அவர்களிடம் விளையாடி விட்டான். அப்போது அந்தக் கந்தர்வன் துரியோதனனைத் தன்னுடைய தேரிலே கட்டி இழுத்துக்கொண்டு போய்விடுகிறான். கூட வந்தவர்கள் நூறுபேர் படை பலத்துடன் இருந்தும் அவர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஆனால் துரியோதனனைத் தேர் இழுத்துக் கொண்டு ஆகாசத்திற்குப் போய்விட்டது. அப்போது கத்துகிறான் துரியோதனன். அவனது சப்தத்தைக் கேட்டு காட்டில் போய்க் கொண்டிருந்த பஞ்ச பாண்டவர்கள், ஓடிவந்து மேலே நிமிர்ந்து பார்க்கிறார்கள். அப்போது அவர்களுக்குப் பக்கத்திலே இருந்தவர்களும், பீமனும், அர்ஜுனனும் 'இவனுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்' என்று சொன்னார்கள்; நிந்தனை செய்தார்கள்.

அப்போது தர்மபுத்திரன் பார்த்து விட்டு, 'அப்படிச் சொல்வது சரியல்ல; நம்முடைய சகோதரர்கள் அவர்கள். நாம் அவர்களை அப்படி நிந்திக்கக் கூடாது' என்று கூறி அர்ஜுனனை, மீட்டு வருமாறு அனுப்பினார். அர்ஜுனன் ஒரு விமானத்தை எடுத்துக் கொண்டு மேலே சென்று, கந்தர்வர்களுடன் போராடி துரியோதனனை மீட்டு கீழே அழைத்துக் கொண்டு வருகிறான்.

அப்போது தர்மபுத்திரன் சொல்கிறான்;

'நாம் ஐந்து பேராக இருக்கலாம். ஆனால் பொது எதிரி வரும்போது நூற்று ஐந்து பேராகிறோம்' என்று சொல்கிறான்.

அந்தப்படித்தான் நாம் எப்போதும் நடந்து கொள்ள வேண்டும். நமக்கு உள்ளே ஜாதி வித்தியாசங்களும், கருத்து வேறுபாடுகளும் இருக்கலாம். ஆனால் நம்முடைய சமயம், பண்பாடு, நம்முடைய கலாச்சாரம், நம்முடைய தேசம் என்று வருகிறபோது நாம் எல்லாருமே ஒன்றாகிவிட வேண்டும்!

இதிலே மூன்றாவது ஆளுக்கு இடம் கொடுக்காமல் வாழ்ந்து காட்ட வேண்டும்! அதுதான் மிகமிக முக்கியமானது!

இதையே அன்றைக்குத் தர்மபுத்திரர் சொன்னார்:

'நாம், நமக்குள் வெவ்வேறு கருத்துகளைக் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால் நம்முடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கஷ்டம் என்று வரும்போது, அவர்களை நம்மோடு நாம் ஒன்று சேர்த்துக்கொண்டு அவர்களைக் காப்பாற்றவேண்டும்.'

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



நமது நாடு பவித்ரமான நாடு, பவித்ரத்தை பிரசாரம் செய்வதால், மக்களுக்கு நல்லதே ஏற்படும். இடைஞ்சல், சங்கடம் ஏற்படாது. சாத்விகமான சிந்தனை, யோசனை, யார் சண்டை போடும் திசையில் இல்லையோ, வெறுப்பு திசையில் இல்லையோ, அனாசார திசையில் இல்லையோ, அத்யாசார திசையில் இல்லையோ, அங்கு சாத்விகமான சிந்தனை, பக்தி மார்க்க வழி மனித சிந்தனை, மனித வளர்ச்சிக்கு, மனித மேம்பாட்டுக்கு வழி செய்யும் நமது சனாதன தர்மம்.

சனாதன தர்மம், அனுஷ்டானம் மூலம், பிரசாரம் மூலம், மனுஷ்யர்களுக்கு மட்டுமல்ல, விலங்குகளுக்கும் நல்லது, கல்யாணம் ஏற்படுகிறது. பூமியும் பாதுகாக்கப்படுகிறது. Natural Resources - நீர் வளம், நிலம், பசு பக்ஷி வகைகள், ஜீவ ராசிகள் அனைத்திற்கும் கல்யாணம் (நல்லது) ஏற்படுகிறது. இதனால், சுற்றுப்புற சூழ்நிலை (Environment Protection) பாதுகாத்தல் என்று எப்பொழுதும் சொல்ல வேண்டியதில்லை. விலங்குகள் நலன் (Animal Welfare) என்று தனித் தனியாக சொல்வதற்கு தேவையில்லை. அனாதி காலத்தில் இருந்து, மனித சமுதாயத்திற்கு மட்டுமின்றி, அனைத்து உலகத்திற்கும் inclusive growth, இந்த சனாதன தர்மத்தில் ஆதி காலத்தில் இருந்து உள்ளது.

சரித்திரம் எழுதுகின்றவர்கள் சொல்கிறார்கள் - இந்த கலாசாரம், பரம்பரை 5000 வருஷங்கள் மேல் உள்ளது என்று. இப்பொழுது நாம் பார்க்கும் உலகம் 5000

வருஷங்கள் முன்பும் இருந்தது. எப்பொழுது இந்த ஸ்ருஷ்டி உருவாகியதோ, அன்று முதல் இந்த தர்மம் உள்ளது.

சிருஷ்டியில் படைக்கப்பட்ட மனிதர்களுக்கு ஆனந்தம் கிடைக்க வேண்டும். மனது அமைதி, சாந்தம் அடைய வேண்டும். இதற்காக தர்மம் உள்ளது. அதற்கான பிரசாரம் துவங்கியுள்ளது. இந்த பாரத தேசம் தர்ம தேசம். இந்தப் பிரசாரம், தர்மப் பிரசாரம், இதன் பயன், உலகம் அனைத்திற்கும் கிடைக்கிறது. பாரதம் சுகமாக இருந்தால், உலகமே சுகமாக இருக்கும். பாரதம் வளர்ச்சி அடைந்தால், உலகம் அனைத்திற்கும் வளர்ச்சி. சிந்தனை நதி, வளர்ச்சி, சிந்திக்கும் முறைகள் (Thinking Methods) இங்கிருந்து துவங்குகிறது. இங்குள்ள ரிஷிகள், ஞானிகளின் மார்க்கம் - இந்த உலகம் எப்படி சிந்திக்க வேண்டும் என்று, உதாரணன், இந்த பாரத தேசத்தின் மகான்களின் சிந்தனை மார்க்கம், வழி.

இதனால், இந்த ரிஷிகளின் பூமி, பாரத ரிஷிகளின் பூமி. அதனால், இந்த விசேஷ பூமி காஷ்மீர் பற்றி சிறப்பான உரை ஆரம்பிக்கப் போகிறோம். காஷ்மீர் பிரதேஷம், காஷ்யப முனியின் பிரதேசம். இதனால், காஷ்மீர் பூமி பற்றி அனைவரும் தெரிந்து கொள்ள இன்று தொடர் சொற்பொழிவு ஆரம்பம் ஆகிறது. இந்தியாவில் இருக்கும் பக்தர்கள், வெளிநாட்டில் இருக்கும் NRI அனைவரும் இந்தத் தொடரில் பங்கு கொண்டு, இந்தியாவின் முக்கிய பாகமான காஷ்மீரில் அமைதி, வளர்ச்சி நிலவ, அங்குள்ள கலாசாரம், மிகப் புராதனமான கலாசாரம். இதன் விவரம் அமர்நாத் மகாத்மியம் என்பதில் இருந்து நமக்குத் தெரிகிறது. அது போல், ராஜதரங்கிணி புஸ்தகம் மூலம், காஷ்மீர் ராஜாக்கள் மூலம் கோவில் நிர்மாணம், கலைனர்களின் திறமை, வளர்ச்சி, இலக்கியம் நமக்கு அறியப்படுகிறது. யார் விசாலமான தூர் பார்வையுடன் சிந்தனையை வளர்க்கிறார்கள்? நாமும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும், மற்றவர்களும் வாழ வேண்டும், நம் அருகில், எதிரில் இருப்பவரும் நன்றாக இருக்க வேண்டும். நாம் சிறிது அளவு கஷ்டமடைந்தாலும், தன் முன் இருப்பவர் சுகமாக இருக்க வேண்டும் என்று யார் சிந்திக்கிறார்களோ, அந்த பூமி, ரிஷிகளின் பூமி. காஷ்மீர் பூமி. அநேக தீர்த்த ஸ்தானம் உள்ள பூமி - கீர் பவானியில் தொடங்கி; அங்கே பல கோவில்கள் உள்ளன. ஹிமாலய பிரதேசத்தில் பல தபஸ்விகள் சாதனா செய்துள்ளார்கள். தர்மத்தை ஆதரித்தார்கள். தர்ம பிரசாரம் செய்தார்கள். தர்மத்தின் பூமியாக இருந்தது. அமைதியின் பூமியாக இருந்தது. கவிதைகளின் பூமியாக இருந்தது. பூமியின் அழகான பகுதியாக இருந்தது. சக்தி உபாசனையின் பூமியாக இருந்தது.

அபிநவ குப்தா மூலம் காஷ்மீர், Saivism பூமியாக இருந்தது. சுவாமி அமர்நீச்வர, மார்த்தாண்ட, மற்றும் பல சிற்ப கலை வல்லுனர்கள் இருந்த ஸ்தலம். சனாதன தர்மத்தின் பிரதிநிதியாக விளங்குகிறது காஷ்மீர். இன்றைய ஸ்திதி விசித்திரமாக இருந்தாலும், அமைதியின் பரம்பரையை நாம் பாதுகாக்க வேண்டும்.

காஷ்மீர் மக்கள், லோகாக்ஷீ முனிவரின் வழி வந்தவர்கள், கோபிந்த் முனி வழி வந்தவர்கள், அவர்கள் பக்தர்கள்; பண்டித் மக்கள் வெளியே உள்ளார்கள். பெங்களூர், சென்னை போன்ற இடங்களில் படிக்கிறார்கள். குடும்பம் நடத்துகிறார்கள். வியாபாரம் செய்கிறார்கள். அதெல்லாம் சரி. இருப்பினும், அவர்கள் இடத்தில், அவர்கள் ஸ்தானத்தில் சந்தோசமாக, பாதுகாப்புடன் வாழ, ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அதன் காரணமாக, இன்று இரண்டு முக்கியஸ்தர்கள் உள்ளார்கள். ஒருவர் IAS Gariyaali அவர்கள். இருபது , முப்பது வருடம் அரசாங்கத்தில் சேவை செய்த பின்பும். சேவை செய்ய முன் வந்துள்ளார்கள். நமது பூஜ்ய ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி மகராஜ் மற்றும் நமது குரு ஜெயேந்திர சரஸ்வதி அவர்களின் அருளாசி வேண்டியுள்ளார்கள். முப்பது, முப்பத்தைந்து வருடங்கள் முன், 80ல் ஜம்மு காஷ்மீரில் நடந்தது- மக்களின் நடுவே சங்கடங்கள் ஏற்ப்பட்டது. அச்சமயம், காஞ்சிபுரம் வந்து, கரியால் ஜீ அவர்கள் காஷ்மீர் பண்டிட் சமுதாயத்திற்கு பெரியவர்களிடம் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார்கள். அதைக் குறித்து சில article கூட எழுதி உள்ளார்கள்.

அடுத்தது வித்யா வாசஸ்பதி டாக்டர் நாகசுவாமிஜி அவர்கள். கோவில் நிர்மாணம், மற்றும் கோவில் ஆராதனையின் முக்கியத்துவத்தை லண்டன் வரை சென்று, அங்கு வாதாடி, நாடராஜர் சிலையை மீட்டிக் கொண்டு வந்தது பெரும் மகத்தானது. இது மட்டுமல்ல. இப்பொழுது, சில வருஷம் முன்னே, ராம ஜன்ம பூமி, அயோத்தியாவில், மூன்று குழு நீதிபதிகள் முன், பூமிக்கு அடியில் என்னென்ன விஷயம், செய்திகள் கிடைத்ததோ, ஸ்தம்பம், கல், பாத்திரம் அனைத்தும் சனாதன தர்மத்திற்கு சம்பந்தமானது என்று நீதிபதிகளின் கேள்விக்கு எல்லாம் மூன்று வாரம் பதில் கூறி, தேசம், விதேசம் லண்டன் இரண்டு நீதி மன்றம் நடுவே வாதாடி, விக்ரஹ வழிபாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அதன் பலனும் அயோத்தியாவில் பார்த்தோம். இதனால், லண்டனில் இருந்து நமக்கு நடராஜர் திரும்பி கிடைத்தது. நமது சாஸ்திர நம்பிக்கையின் மூலம் அனைத்தும் செல்கிறது. ஆனாலும், வெளிப்படையாக நமது கலாசாரத்தை, நடக்கும் சர்ச்சையின் நடுவே வளர்க்க பிரமாணம் தேவை. காஷ்மீர்

புனர் நிர்மாணம் செய்ய வேண்டும். இரண்டு முக்கிய அதிதிகள் அவர்களின் கருத்துக்களை தெரிவிப்பார்கள்.

இங்குள்ள பக்தர்கள், அங்குள்ள தர்மம், இலக்கியம் பற்றி லௌகாக்ஷி க்ரிக்ய சூத்திரம் என்ற கர்ம காண்ட புஸ்தகத்தை, திருப்பதியில் உள்ள vedic விஷ்வ வித்யாலயா, காஞ்சி மடத்தின் மூலம், இந்த புத்தகத்தை மீண்டும் பிரசுரிக்கிறது. ருத்ர பாடம் மறுபடியும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நமது பாரதிய இதிகாசத்தில் காஷ்மீருக்கு முக்கிய இடம். கலாச்சாரத்தை காப்பாற்ற, காஷ்மீர் முக்கியத்துவம் வாய்ந்தது. காஷ்மீரில் சங்கராச்சாரியார் மலை, கீர் பவானி கோவில் உள்ளது. ஆகவே காஷ்மீர் சரித்திரம் கேட்கவும், காஷ்யபரின் பூமியை மீண்டும் மீட்டு எடுக்கவும், அமைதி மற்றும் பாதுகாப்பு நிலவவும், அங்கு எண்ணங்களின் ஊற்றாகிய சாரதா லிபி (எழுத்துக்கள்) காப்பாற்றவும், காஷ்மீர் மொழியை மீண்டும் நடைமுறையில், வர்த்தகத்தில் கொண்டு வரவும், மனுஷ்ய சக்தி, ஈஸ்வர சக்தி இரண்டும் சேர்த்து, சாந்தி, பாதுகாப்பு, வளர்ச்சி, நிரந்தர அமைதிக்கு நாம் பகவானிடம் பிரார்த்தனை செய்வோம்.

***ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர***



## இனிய தமிழ் புத்தாண்டு (சுபகிருது) நல்வாழ்த்துக்கள்



# முகாம் நிகழ்ச்சிகள்



*திருப்பதி சங்கரமடத்தில் தனுர்மாஸ பூஜையை முடித்துக் கொண்டு தொடர்ந்து ஒரு மாத காலம் அங்கேயே தங்கி சந்திரமௌளீச்ர பூஜையை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் நடத்தினார்கள். பின்னர் பிப்ரவரி மாதம் 13ம் தேதி திருப்பதி பாதுகா மண்டபத்திலிருந்து புறப்பட்டு முகாம் காஞ்சீபுரம் அருகேயுள்ள ஓரிக்கை மணிமண்டபத்தை அடைந்தது. திருப்பதியில் ஸ்ரீ ஆசார்யாள் தங்கியிருந்த போது பல்வேறு ஹோமங்கள், இஷ்டிகள், வேதபாஷ்ய சதஸ், பாராயணம் ஆகியவை நமது சங்கரமடத்தில் நடைபெற்றது. TTD ஏற்பாடு செய்திருந்த பல்வேறு நிகழ்ச்சிகளிலும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பங்கேற்றார்கள்.*

*தொடர்ந்து 14.02.2022 முதல் ஓரிக்கை மணிமண்டபத்தில் தங்கியிருந்து ஸ்ரீசந்த்ரமௌளீச்வர ஸ்வாமி பூஜையை நடத்தினார்கள். ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆலய ப்ரம்மோத்ஸவ விழாவில் பங்கேற்றார்கள்.*

***24 பிப்ரவரி*** *மாக க்ருஷ்ண அஷ்டமியன்று ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் 66வது பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் (VI) அவர்களின் ஆராதனை விழா அவரது ப்ருந்தாவனம் அமைந்துள்ள கலவையிலும், ஓரிக்கை முகாமிலும் நடைபெற்றது.*

***27 பிப்ரவரி*** *ஸ்ரீ ஆசார்யாளின் ஜயந்தி விழா காஞ்சீபுரம் ஸ்ரீமடத்திலும் ஓரிக்கை முகாமிலும் மற்றும் காஞ்சி மடத்தின் அனைத்து கிளைகளிலும் முக்யமாக வெளிநாடு வாழ் ஸ்ரீமடம் பக்தர்களாலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தொடர்ந்து மூன்று நாட்கள் வேத பாஷ்ய சதஸ், விசேஷ ஹோமங்கள், சங்கீத கச்சேரிகள் ஆகியவை நடைபெற்றது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் அவதார ஸ்தலமான தண்டலத்திலும் ஜயந்தி விழா வெகு விமரிசையாக பத்து நாட்கள் கொண்டாடப்பட்டது. ஓரிக்கை முகாமில் ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர ஸ்வாமி பூஜையை முடித்துக் கொண்ட ஸ்ரீ ஆசார்யாள் அங்கு*

நடந்த ஹோம பூர்ணாஹூதியில் பங்கேற்றார்கள். பின்னர் ஹோம கலசங்களால் ஸ்ரீ ஆசார்யாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள், திருப்பதி வெங்கடேச்வர ஸ்வாமி, திருச்சி அகிலாண்டேஸ்ரி ஆலயம் மற்றும் பாரதம் முழுதும் பல்வேறு இடங்களிலிருந்து வந்திருந்த ஸ்வாமி ப்ரஸாதங்கள் ஸ்ரீ ஆசார்யாளுக்கு கொடுக்கப்பட்டது. மாலை 6 மணி அளவில் ஓரிக்கையிலிருந்து புறப்பட்டு காஞ்சீபுரம் ஸ்ரீமடத்திற்கு நடந்தே வந்து ஸ்ரீ மஹாபெரியவாள் மற்றும் ஸ்ரீ பெரியவாள் ப்ருந்தாவனங்களை தர்சனம் செய்த ஸ்ரீ ஆசார்யாள் அங்கு நடைபெற்ற ஸ்வர்ண ரத சேவையிலும் பங்கு கொண்டார்கள்.

***1 மார்ச் 2022 - ஸ்ரீ மஹா சிவராத்திரி***

ஸ்ரீ மஹா சிவராத்ரியன்று மாலை 6.00 மணி அளவில் பூஜையை தொடங்கிய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தொடர்ந்து நான்கு கால பூஜையையும் இடைவேளையின்றி நடத்தினார்கள்.

***3 மார்ச்*** பாலகுண சுக்ல ப்ரதமையன்று ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் 67வது பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ மஹாதேவேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் ஆராதனை விழா அவரது ப்ருந்தாவனம் அமைந்துள்ள கலவையிலும் ஓரிக்கை முகாமிலும் நடைபெற்றது.

தொடர்ந்து சோளிங்கர் அருகேயுள்ள அருள்மிகு பொன்னியம்மன் ஆலய கும்பாபிஷேக யாகசாலையில் பங்கேற்ற ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பக்தர்களுக்கு ஆசி வழங்கினார்கள்.

***மார்ச் 4ம்***தேதி வாலாஜாபேட்டை சங்கரமடம் கும்பாபிஷேக விழாவில் பங்கேற்றார்கள்.

***மார்ச் 6ம்*** தேதி ஆரணி அருகேயுள்ள புராதனமான அடையபலம் கிராமத்திலுள்ள ஸ்ரீ காலகண்டேஸ்வர ஆலய கும்பாபிஷேக விழாவில் பங்கேற்றார்கள்.

ஸ்ரீ ஆசார்யாள் அனுக்ரஹத்துடன் மத்தியப்ரதேசத்திலிலுள்ள நர்மதை நதிக்கரையில் அமர்கண்டக் எனும் இடத்தில் புதிய வேதபாடசாலை திறக்கப்பட்டது. அவ்வளாகத்தில் ஸ்ரீ ஆதிசங்கர மூர்த்தி ப்ரதிஷ்டை செய்யப்பட்டது

***மார்ச் 13*** அன்று சென்னை மயிலாப்பூர் சித்திரக்குளத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சங்கரமடத்தின் கும்பாபிஷேக விழாவில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பங்கேற்றார்கள்.

அன்று காலை சுமார் 6.00 மணியளவில் கும்பாபிஷேகத்தில் பங்கேற்ற ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் திரும்பும் வழியில் செங்கல்பட்டு அருகேயுள்ள ஆத்தூர் வேதபாடசாலைக்கு விஜயம் செய்தார்கள். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீமடம் வந்து சேர்ந்தார்கள். தொடர்ந்து ஸ்ரீமடத்தில் சந்த்ரமௌளீச்வர ஸ்வாமி பூஜையை நடத்தினார்கள்.

**மார்ச் 15ம்** தேதி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 69து பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் நான்காவது வார்ஷிக ஆராதனை மஹோத்ஸவம் ஸ்ரீமடத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஆராதனையையொட்டி விசேஷ ஹோமங்கள், சதுர்வேத பாராயணம், வேத பாஷ்ய வித்வத் ஸதஸ், ஸங்கீத கச்சேரிகள் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மதியம் 2.00 மணி அளவில் தீர்த்தநாராயணர் பூஜை நடத்தப்பட்டு அனைவருக்கு அக்ஷதை ப்ரஸாதம் அளிக்கப்பட்டது. விழாவில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

**மார்ச் 16ம்** தேதி அன்று மூன்று கால சந்த்ரமௌளீச்வர ஸ்வாமி பூஜையை முடித்துக் கொண்டு காஞ்சீபுரத்திலிருந்து விஜய யாத்திரையை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் மேற்கொண்டார்கள். நெரூர் ப்ரும்மஸ்ரீ ரமண சர்மா அவர்கள் விஜய யாத்ரை ப்ரசஸ்தி பத்ரம் வாசிக்க யாத்ரா தானம் அளிக்கப்பட்டு காஞ்சீபுரத்திலிருந்து திருத்தணி அருகேயுள்ள பொன்பாடி எனும் இடத்தில் ஸ்ரீமடம் முகாம் வந்து சேர்ந்தது. 17, 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் பொன்பாடியில் பூஜை நடைபெற்றது. காஞ்சீபுரத்திலிருந்து பொன்பாடி செல்லும் வழியில் ஏனாத்தூர் சங்கரா கல்லூரி வளாகத்திற்கு சென்ற ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அங்கு நடைபெற்ற விழாவில் திண்ணைப் பள்ளிக்கூடம் எனும் அமைப்பை தொடங்கி வைத்தார்கள்.

**மார்ச் 19** அன்று மூன்று கால பூஜையை முடித்துக்கொண்டு கடப்பா புறப்பட்டார்கள். போகும் வழியில் புத்தூர், கோடூர், மன்னூர் ஸ்ரீநிவாஸ பெருமாள் கோவில், ராஜாம்பேட்டை ஆகிய இடங்களில் பொதுமக்கள் வழங்கிய வரவேற்பை ஏற்றுக் கொண்ட ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் இரவு கடப்பா வந்து சேர்ந்தார்கள். அங்கு மோச்சம்பேட்டா என்ற இடத்திலுள்ள ஸ்ரீ அகோபில மடத்தில் சந்த்ரமௌளீச்வர பூஜை நடைபெற்றது. 20.03.22 அன்று மூன்று கால பூஜையையும் முடித்துக் கொண்டு சாயங்காலம் கடப்பாவில் உள்ள வாசவி கன்னிகா பரமேஸ்வரி கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள். மேலும் கடப்பா அர்ச்சகர் சமிதியை சேர்ந்த நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

***மார்ச் 21*** அன்று மூன்று கால பூஜையையும் முடித்துக் கொண்டு தாடிபத்ரி எனும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள காயத்ரி மாதா ஆலயத்தில் சந்த்ரமௌலீச்வர பூஜைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 1983ம் ஆண்டு ஸ்ரீ புதுப்பெரியவாளுடன் கர்னூல் சென்று திரும்பும் வழியில் இதே அனந்தபூர், தாடிபத்ரி வழியாகவே யாத்ரை செய்தார்கள். அதே போல் கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் கழித்து அந்த ஊருக்கு விஜயம் செய்த ஸ்ரீ ஆசார்யாளுக்கு ஊர்மக்கள் சார்பில் வேத பாராயணம், மேள தாளம், கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் அமர்ந்து ஸ்ரீ ஆசார்யாள் வரவேற்பை ஏற்றுக் கொண்டார்கள்.

### மார்ச் 23 அன்று அனந்தபூர் முகாம்-

22.03.22 அன்று தாடிபத்ரியில் மூன்று கால பூஜையையும் முடித்துக்கொண்டு இரவு அனந்தபூர் ஸ்ரீமடம் முகாம் வந்தடைந்தது. அனந்தபூரிலும் இரவு 8 மணி முதல் 12 மணி வரை மாபெரும் வரவேற்பு ஊர்வலம் நடைபெற்றது. அந்த இரவு நேரத்திலும் திரளான பொதுமக்கள் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தொடர்ந்து இரண்டு நாட்கள் அனந்தபூரில் தங்கியிருந்து சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜையை நடத்தினார்கள். அனந்தபூரில் தங்கியிருக்கும் போது ஊரிலுள்ள வாசவி அம்மவாரு கோவில் மற்றும் சத்யநாராயண ஸ்வாமி கோவில் ஆகியவற்றிற்கு விஜயம் செய்தார்கள்.

***மார்ச் 24*** அன்று மூன்று கால பூஜையையும் முடித்துக் கொண்டு முகாம் கர்னாடக மாநிலம் பெல்லாரி மாவட்டத்தில் உள்ள சாந்தூர் வந்தடைந்தது. ஸ்ரீ ஆசார்யாள் மட்டும் பெல்லாரியில் இரவு தங்கினார்கள். அங்கு KRS ஹாலில் புரோஹிதர் சங்கம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாதபூஜை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கன்னடத்தில் அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள். தனது உரையில் தான் மஹாபெரியவாளுடனும் ஸ்ரீ புதுப்பெரியவாளுடனும் கர்னாடக மாநிலத்தில் யாத்ரை செய்த நினைவுகளை பகிர்ந்து கொண்டார்கள். மறுநாள் காலை புறப்பட்டு சுமார் 8.30 மணி அளவில் சாந்தூர் வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீ ஆசார்யாளுக்கு சாந்தூர் மஹாராஜா குடும்பத்தாரும் ஊர்மக்களும் வரவேற்பு அளித்தனர். அங்குள்ள சிவன் கோவிலில் சுமார் ஒரு வார காலம் முகாம் தொடர்ந்தது.

*25.03.2022 முதல் 30.03.2022 வரை சாந்தூரில் முகாம்*

*இந்த சாந்தூரில் தான் ஸ்ரீ மஹாபெரியவாள் 1978ம் ஆண்டு சுமார் ஒரு மாத காலம் முகாமிட்டிருந்தார்கள். அப்போதைய ராஜா திரு M.Y.கோர்படே அவர்கள் ஸ்ரீ மஹாபெரியவாளின் மிகத்தீவிர பக்தராவர். அப்போது துவங்கி இன்று வரை அவருடைய குடும்பம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துடன் தொடர்பிலிருந்து வருகிறது. ஸ்ரீ புதுப்பெரியவாளும் 1979ம் ஆண்டு இங்கு முகாமிட்டு ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர பூஜை செய்துள்ளார்கள். ஸ்ரீ மஹாபெரியவாள் தங்கிய அறை இன்றும் அந்த கோவிலில் பராமரிக்கப்பட்டு வருகிறது.*

*சாந்தூரில் தங்கியிருந்த போது திரு கோர்படே அவர்களது அரண்மனை மற்றும் முக்கிய இடங்களை ஸ்ரீ சுவாமிகள் பார்வையிட்டு ஆசி வழங்கினார்கள். ஆறு நாட்கள் சாந்தூரில் நடைபெற்ற ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜையில் ராஜ குடும்பத்தைச் சார்ந்தவர்கள் நாள்தோறும் கலந்து கொண்டு ஸ்ரீ ஆசார்யாளிடம் ஆசி பெற்றார்கள்.*

*சாந்தூர் விஜயத்தில் முக்கியமாக மலை மீதுள்ள புராதனமான ஸ்ரீ குமாரஸ்வாமி ஆலயத்திற்கு சென்று வழிபட்டார்கள். மேலும் சாந்தூரில் உள்ள ராகவேந்திர ஸ்வாமி மடம், சங்கர மடம், லிங்காயத் சமுதாயக் கூடம், விட்டல் மந்திர் மற்றும் மஹராஷ்ட்ரா பவன் ஆகிய இடங்களுக்கு சென்றார்கள். பின்னர் முகாம் அமைந்திருந்த இடத்திற்கு எதிரே உள்ள சாந்தூர் உறைவிட பள்ளி மாணவர்களுக்கு தர்சனம் வழங்கி ப்ரஸாதம் அளித்தார்கள். ஸ்ரீ ஆசார்யாள் விஜயத்தின் நினைவாக ஒரு கல்வெட்டு ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டது. ஏற்கனவே ஸ்ரீ மஹாபெரியவாள் 1978ல் தங்கியிருந்த்தற்கும் ஸ்ரீ பெரியவாள் 1979ல் தங்கி பூஜை செய்ததற்கும் கல்வெட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

*30.03.2022 மூன்று கால பூஜைகளை முடித்துக்கொண்டு சாந்தூரிலிருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஜிண்டால் இரும்பு ஆலைக்கு விஜயம் செய்தார்கள். மறுநாள் காலை ஹாஸ்பெட் முகாமிற்கு திரும்பினார்கள்.*

*31.03.2022 முதல் 12.04.2022 வரை ஹாஸ்பெட்டில் உள்ள வித்யாரண்ய வித்யா பீடம் வேதபாடசாலை வளாகத்தில் ஸ்ரீ ஆசார்யாள் முகாம் தொடர உள்ளது. அங்கு* **வஸந்த நவராத்திரி பூஜைகள் நடைபெற உள்ளன.**

தொடரும்....

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 3

ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்

பி. ஆர். கண்ணன்

ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன்

**ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து**

என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.

அஸங்கோஹம் சிதாத்மாஹமிதி ப்ரத்யாக் ஆத்மனி நிவேஸிதே வ்ருத்திரஹிதே ஸன்ஸ்கார ஸேஷமாத்ரதயா ஸூக்ஷ்மரூபேணாவஸ்திதே சித்தே ஆத்மன: ஸ்வரூபபூத பரமான்னதோ நிரந்தரம் ஸம்யக் ஆவிர்பூயாத் ।। 11 ।।

*மனம் அசையாமலிருக்க, சித்தவ் ருத்திகள் ஒடுங்க ஸம்ஸ்காரங்களால் மட்டும் நான் அஸங்கன், சிதாத்மா ரூபமானவன் என்னும் ஸூக்ஷ்மரூப பரமானந்தம், நிரந்தரம், நன்றாக ஆவிர்பவிக்கட்டும்.*

அஹமாத்மா ஸாக்ஷீ கேவல: சின்மாத்ரஸ்வரூப: நாக்யானம், நாபி தத்கார்ய: கிந்து நித்யசுத்த புத்த முக்த ஸத்யபரமானந்தாத்வ்யம் ப்ரம்மைவாஹமிதி அபேதனாவஸ்தானம் ஸமாதி:தத்ர ச அந்தஸமாதினா த்ருக்த்ர்ய்ஸ்யவிவேகே பஹிஸ்சமாதினா ப்ரம்மஸர்கவிவேகே ச த்ருடே ஜாதே தேன விவேகத்வதூயேனாயம் கலிததேஹாபிமான: விக்யாதபரமாத்மதத்வச்ச பூயாத் ।। 12 ।।

*நான் ஸாக்ஷியாகவும், சின்மாத்ர ஸ்வரூபனாகவும் உள்ளேன். அஞ்ஞானத்தின் தொடர்பின்றி உள்ளேன். மேலும் நித்யம் தூய்மையானவன், அறிவு வடிவானவன், முக்தன், இரண்டற்ற பரமானந்த அத்வைத ப்ரம்மமானவன், ஸமாதியில் பார்ப்பவன் பார்க்கப்படும் பொருள் விவேகத்தையும், வெளி ஸமாதியில் ப்ரம்மம் தோற்றம் என்னும் இரண்டு விவேகத்திலும் உடல் அபிமானம் ஒடுங்கியவனாய் பரமாத்ம தத்வ தர்சனம் அறிந்தவனாய் விளங்க பரமாத்ம தத்வம் கை கூடட்டும்.*

தேஹாத் பஹி ஸகலனாம் ரூபாத்மகேஷு வஸ்துஷ்வபி ஸர்பதாராதிஷு ரஜ்ஜுரிவ வ்யாப்த: ஸச்சிதானந்த லக்ஷணோ ய: பரமாத்மா ஸ ஏவ பரசப்தேன உஸ்யதே. அந்த:அஹமாதி த்ருஸ்ய விலக்ஷண்: அஸ்மத்ப்ரத்யய ஆலம்பனபூத: ப்ரத்யக் சின்மாத்ரஸ்வரூப: ய: ஸாக்ஷ்யாக்யோ ஜீவாத்மா ஸ ஏவ அவர ஸப்தேன உஸ்யதே. பரச்சாஸௌ அவரஸ்சேதி பராவர:ப்ரத்யக்பின்ன: பரமாத்மா தஸ்மின் ஏவம் அந்தர்பஹிஸ்ச பரரூபெண அவரரூபேண ச அவஸ்திதே பரமார்தத: பராவர விபாக

ரஹிதே ப்ரத்யகபின்னே பராவரே ப்ரம்மணி த்வம் வா அஹமஸ்மி பகவோ தேவதே அஹம் வை த்வமஸி இதி ஸ்ருத்யனுசாரேண அஹம் ப்ரம்மஸ்மி ப்ரம்மைவாஹமஸ்மி இதி வ்யதிஹாரேண அகணடைகரஸத்வேன ஸாக்ஷாத்க்ருதே
ஸதி தேன பராவர ப்ரம்மஸாக்ஷாத்காரேண அஸ்ய பராவர ப்ர்ம்ம ஸாக்ஷாத்க்ருதவதோ மம ஹ்ருதயக்ரந்தி பேத ஸர்வஸம்ஸய நிவ்ருத்தி ஸர்வகர்மக்ஷயரூபபரம புருஷார்த: ஸம்யக் ஆவிர் பூயாத் ॥ 13 ॥

*பரமாத்மா சச்சிதானந்த ரூபன். எங்கும் வ்யாபித்து இருப்பவன் பாம்பில் கயிறாய் ஆதாரமாயிருப்பவன். அவன் பரம் என்றழைக்கப்படுபவன். ‘‘ நான் ’’ என்னும் உணர்வுடன் உடலில் ஜீவாத்மாகவும் இருப்பவன். இவன் ‘‘அவரன்’’ என்று அழைக்கப்படுபவன். பரம் அவரம் இரண்டும் ஒரே ப்ரம்மம் தான். வ்யவஹாரிக நிலையில்தான் இப்பேதம். பரமார்திக நிலையில் இல்லை. வேதம் கூறும் ‘‘ஓ பரம் அவரமாயுள்ள ப்ரம்மன் நானே நீ, எனக்கு பரம் அவரமாயுள்ள புருஷார்த லக்ஷ்யம், இதயக் க்ரந்திகள் அவிழ்ந்து ஐயங்கள் நீங்கி உண்மை ஸ்வரூபம் நன்றாக ஆவிர்பவிக்கட்டும்.*

‘‘பித்யந்தே ஹ்ருதயக்ரந்தி: சித்யந்தே ஸர்வ ஸம்ஸய:
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் த்ருஷ்டே பராவரே’’ ॥ 14 ॥

(முண்டக உபனிஷத்)

*எவன் பரம் அவரமாயுள்ள ப்ரம்மத்தை உணர்கிறானோ அவனுக்கு இதயக்ரந்திகள் அவிழ்கின்றன, ஐயங்கள் நீங்குகின்றன, கர்மங்கள் நசிக்கின்றன.*

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
*We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.*
*Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.*
*Contact above address.*

ப்ரதீபப் பேழை

# கீதையும் குறளும்

வே. நாராயணன்

வேதங்கள் நாம் இன்ன செய்ய வேண்டும், இன்ன செய்யக் கூடாது என்பதைப் போதிக்கின்றன. அவற்றின்படி நடந்தால் நாம் நாடிய பொருளைப் பெறலாம். நம் மனமும் தூய்மை பெற்று, நற்காரியங்களிலே ஈடுபடும். கடவுள் எங்கும் வியாபித் திருக்கிறார். ஆகையால் எவ்வுயிர்க்கும் நன்மை பயப்பதே அறிவுடையோரின் செயலாகும். அதனால், ஈசுவரகிருபைக்கு நாம் பாத்திரமாவோம். ஈசுவர கிருபையைப் பெறவே, நாம் ஆத்ம ஞானிகளாகி ஜன்ம ஸம்ஸார பந்தத்தினின்று விடுதலை பெற்றுப் பேரின்பம் எய்துவோம். இது தான் வேதங்கள் நமக்குச் செய்யும் உபதேசம். ஈசுவரனுடைய தன்மையைப் பலவாக உவமைகளையும் கதைகளையும் கூறி நமக்குத் தெளிவாக விளக்குவன உபநிடதங்களாம். இந்த உபநிடதப் பொருளை வினாவிடை ரூபமாய் ஐயந்திரிபற விளக்கும் நூலே பகவத்கீதை என்பது.

திருக்குறள் என்பது அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று புருஷார்த்தங்களையும் பல அதிகாரங்களாக வகுத்துக் கொண்டு கூறுகின்ற தமிழ் நூல். நூலின் தொடக்கத்திலே பாயிரமாக, கடவுளுக்கும் உலகத்திற்குமுள்ள தொடர்பைக் கூறி, வீடு பெறுதற்குரிய உபாயத்தையும் வீடுபேற்றின் இயல்பையும் கூறுகின்றது.

இவ்வாறு தரும சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், காம சாஸ்திரம் ஆகிய நூற்பொருளை யெல்லாம் மூவகையாகப் பாகுபடுத்திக்கொண்டு விளக்கும் திருக்குறளுக்கும், மோஷோபாயங்களைக் கர்மயோகம், பக்தி யோகம், ஞானயோகம் என்று பாகுபடுத்திக் கூறும் ஸ்ரீ பகவத்கீதைக்கும், மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், யாதொரு சம்பந்தமும் இருப்பதாகத் தோன்றாது. ஆயினும், இரு நூல்களும் கைக் கொண்ட முறை வேறுபடினும், அவை விளக்கப் புகுந்த தத்துவமும் ஒன்றேயாம்; அவை நமக்குக் காட்டும் வழியும் ஒன்றேயாம். இதுபற்றியே பகவத்கீதையை வேதத்தின் உட்பொருள் என்றும், திருக்குறளை தமிழ் வேதம் என்றும் கூறுகிறோம். வடமொழி, தமிழ் ஆகிய உபய வேதமும் ஒரே அந்தத்தை உடையன. இந்த ஒற்றுமையின் அம்சங்களில் என் சிற்றறிவினால் கண்ட சிலவற்றை உங்கள் முன் காட்டித் தருவேன்.

ஸ்ரீ கீதையில் பகவான் முடிவாகக் கூறிய பொருளைத் திருவள்ளுவர் தம்முடைய நூலின் தொடக்கத்திலேயே ஒரு முறைக்குப் பன்முறையாகக் கூறுகிறார்.

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ।।

என்பது பகவத் வசனம்.

***(1) பகவான் யார்?***

अहं आदिश्र मध्यं च भूतानामन्त एव च ।

என்கிறது கீதை.

'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பது குறள்; இவற்றையெல்லாம் தோற்றுவித்தவனும் அவனே; காப்போனும் அவனே; இறுதியில் விடுவிப்போனும் அவனே என்பது இதன் பொருள்.

***(2) மோக்ஷம் என்பது என்ன?***

எல்லாத் துன்பங்களினின்றும் விடுதலை பெறுவதே மோக்ஷம்.

सर्वपापेभ्यो मोक्षयिप्यामि मा शुचः என்பது கீதை. 'யாண்டும் இடும்பை இல'' என்பது குறள்.

***(3) மோக்ஷம் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?***

பகவானுடைய சரணாவிந்தங்களைத் தொழுதெழ வேண்டும். मोमेकं शरणं व्रज : என்பது கீதை. 'மலர்மிசை யேகினான் மாணடி சேர்', 'வேண்டுதல் வேண்டாமை யிலான் அடிசேர்', 'இறைவன் பொருள் சேர் புகழ் புரி', 'தனக்குவுமையில்லாதான் தாள் சேர்), 'அறவாழி அந்தணன் தாள் சேர்', ' எண்குணத்தான் தானைத் தலையால் வணங்கு', 'இறைவனடி சேர்'', வாலறிவன் நற்றாள் தொழு என்பன திருக்குறள்.

***(4) வேறு வழி இல்லையா மோக்ஷம் பெறுவதற்கு?***

இல்லை என்றே சொல்லலாம். யாதொரு தருமாசரணமும் வழியாக மாட்டாது. எல்லாத் தருமங்களின்படி நடந்து கொண்டாலுமே கடவுளின் அருளில்லயேல் மனக்கவலை மாறாது.

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज என்பது கீதை एकं என்பது தனக்குவமையில்லா தவன் என்பதைக் குறிப்பிடுகிறது. தனக்குவுமையில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது. அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால் பிறவாழி

*நீத்தல் அரிது. அவன் அறவன்; தரும ஸ்வரூபமாக விளங்குவது அவன் கையில் ஏந்திய திருச்சக்கரம். அந்த ஆழிப்படையுடையவன் அந்தணன்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவோன். அவனைத் திருவடி தொழுதால், நாம் செய்பவற்றை எல்லாம் அறமாகவே கொண்டு நமக்கு அருள் புரிவான். இறைவனடி சேர்ந்தால் மட்டுமே பிறவிப் பெருங்கடலை நீந்துவோமாவோம். திருவடியாகிய புனையைப் பெறாதவர் பிறவிப் பெருங்கடலை நீந்திச் சென்று கரையேற முடியாது.*

### *(5) அந்த ஈச்வரன் எங்கே இருக்கிறான்?*

ईश्वर: सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ।।
तमेव शरणं गच्छ सर्वभावेन भारतं
तत्प्रसादात् परां शान्तिं स्थानं प्राप्यसि शाश्वतम् ।।

*என்று கீதை விடை பகர்கின்றது. திருக்குறளும், 'மலர்மிசையே கினான் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடுவாழ்வார்', என்று அறுதியிடுகின்றது. உயிர்களையெல்லாம் காப்பதற்காகவே இணையற்ற இணையடிகள் நோவ அவ்வுயிர்களின் மனத்திடர்களிலே வாழ வல்லானாய் வந்து ஸ்திரப்பிர திஷ்டனாய் இருக்கிறான். அத்தகைய மாட்சிமையுடைய திருவடிகளிலே சரண் புகுந்தவர்கள் நிலமிசை நீடு வாழ்வார்கள். சாச்வதமான ஸ்தானத்தைப் பெற்றுப் பரம சாந்த மூர்த்திகளாய் விளங்குவார்கள்.*

### *(6) அடிசேர்தல் என்றால் என்ன?*

*எப்பொழுதும் இறைவனுடைய புகழைப் பாடிப் பக்தி செய்வதே அடிசேர்வதாகும்.*

भक्त्या त्वनन्यया शक्य अहमेवंविधोऽर्जुन ।
ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परन्तप ।।

*என்பது கீதை.*

*வேத வசனங்களாலோ தவத்தாலோ ஈகையாலோ வேள்வியாலோ என்னைக் காண இயலாது. வேறு அறியாத பக்தியாலோ என்னை அறிவதற்கும் காண்பதற்கும் என்னுள் புகுந்து ஒன்றுவதற்கும் இயலும். இது என் இயல்பு'' என்று முடிவு கட்டுகிறார் கிருஷ்ண பகவான்.*

இது பக்ஷபாதமன்று;

समोऽहं सर्वभूतेषु न मे देष्पोऽस्ति न प्रिय: ।
ये भजन्ति तु मां भक्त्या मयि ते तेषु चाप्यहम् ।।

'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்பது குறள். ஆயினும் பகவான் நச்சினார்க்கினியன். அவனடி சேர்ந்தார்க்கு, யாண்டும் இடும்பை இல' என்று குறள் பறையடிக்கின்றது. कौन्तेय प्रतिजानीहि न मे भक्त: प्रणश्यति 'என் பக்தன் நாசமுறான் என்று பறையடிப்பாய், குந்தி மகனே!'' என்கிறார் கிருஷ்ண பகவான்.

அடி சேர்வோர் நான்கு வகையினர்.

चतुर्विधा भजन्ते मां जना: सुकृतिनोऽर्जुन ।।
आर्तो जिज्ञासुरर्थार्यी ज्ञानी च भरतर्षभ ।।

என்பது பகவத் வசனம்.

இருவினைப் பயனையும் நுகர்ந்து துன்புறுவோன் ஆர்த்தன். இறைவனைத் துதிப்பதாலேயே இவனைப் பீடிக்கும் இருவினைப் பயனும் விலகும் என்பர் திருவள்ளுவர்.

**'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு.'**

கடவுளின் தத்துவத்தை உணர்ந்த மெய்ஞ்ஞானிகளும் ஞானமயனான பரம்பொருளின் ஞானவடிவான திருவடியினைச் சேர்ந்தோர் ஆவர். அவர்கள் அந்த ஞானத்தாலே எல்லா உயிர்களையும் தம்மிடத்திலே காண்கிறார்கள். அதனாலேயே பகவானிடத்திலும் எல்லா உயிர்களையும் காண்கிறார்கள்.

यज्ज्ञात्वा न पुनर्मोहमेवं यास्यसि पाण्डव ।
येन भूतान्यशेयेणं द्रक्ष्यस्यात्मन्यथो मयि ।।
अपि चेदसि पापेभ्य: सर्वेभ्य: पापकृत्तम : ।।
सर्वं ज्ञानपलवेनैव बृजिजं सन्तरिष्यसि ।।

கற்பதனால் உண்டாகும் ஞானம் என்ன பயனைத் தருவது என்றால், ஞானமயனான பரமனுடைய திருவடியாகிய புணை பெற்று எல்லா உயிர்களும் பிறவிப் பெருங்கடலை

*நீந்திக் கரையேறுகின்றன என்று அறிந்து அந்தத் திருவடிகளைப் புணையாகப் பெறும் பாக்கியத்தைத் தருகின்றது என்பர் ஆசிரியர் திருவள்ளுவர்.*

***'கற்றதனா லாய பயன் என்கொல் வாலறிவன்***
***நற்றாள் தொழாஅர் எனின்,***

### *(7) திருவடி சேர்வதற்கு வழி எது?*

*அவனவனுடைய பிறப்பு, வளர்ப்பு, சூழ் நிலை முதலியவற்றிற்கேற்ப அவன் முன்னோர் கையாண்டு வந்த பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு, ஐம்பொறிகளையும் அடக்கி, அவாவினை அறுத்து, தூய உள்ளத்தினனாக ஒழுகுவதே திருவடி சேர்வதற்கு உபாயமாம்.*

**'பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்.''**

**என்பது குறள். இதனையே,**

**'ஒருமையு ளாமை போ லைந்தடக்க லாற்றின்**
**எழுமையு மேமாப் புடைத்து.''**

**என்னும் குறள் வற்புறுத்துகின்றது. கீதையும்,**

यदा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ।।

*என்று கூறுகின்றது.*

***அவாவினை அறவே அறுத்தல் வேண்டும்.***

काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ।।
तस्मात्त्वमिन्द्रियाणयादौ नियम्य भरतर्षभ ।
पाप्मानं प्रजहि ह्येनं ज्ञानविज्ञाननाशनम् ।।

***'அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும்***
***தவா அப் பிறப்பீனும் வித்து.'***

***'வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை***
***யாண்டும் அஃதொப்ப தில்.'***

**'அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்; அஃதுண்டேல்**
**தவா அது மேன்மேல் வரும்.'**

என்பவை குறள்.

'அவா அற்றுப்போனால், மனத்தூய்மை தானே வரும்' என்பதையும் திருக்குறள் விளக்குகின்றது. 'தூஉய்மை என்பது அவாவின்மை.' அவாவற்ற நிலையே முக்தி நிலை.

विगतेच्छाभयक्रोधो यः सदा मुक्त एव सः ।।

*'ஆரா வியற்கை யவா நீப்பின் அந்நிலையே*
*பேரா வியற்கை தரும்.'*

*அவா பெரிதுமுடையவன் அவாவற்றவன் போல நடித்தல் பொய்யொழுக்கமாகும். மனத்திலே அவாவினுக்கு இடங்கொடுத்துக் கர்மேந்திரியங்களை மட்டும் அடக்குவோன் பொய்யொழுக்கமுடையோன் ஆவான்.*

कर्मेन्द्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इन्द्रियार्थान् विमूढात्मा मिथ्याचारः स उच्यते ।।

*மனம் சலிப்பது இயல்பு. அதனை அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் சிறிது சிறிதாக அடக்குதல் வேண்டும்.*

असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् ।
अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते ।।

*என்று பகவானே ஒப்புக்கொள்ளுகிறார். வைராக்கியம் எப்படி ஏற்படும் என்றால் குறளாசிரியர் அதற்கு விடை பகர்கிறார் :*

*''பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு,'*

*பகவானிடத்தில் பக்தி செலுத்துவதே வைராக்கியம் பெறுவதற்கு உபாயமாகும். 'மீண்டும் மீண்டும் மனத்தை அடக்க முயல வேண்டும் என்கிறீர்களே, முதன் முயற்சியிலே இடர்ப்பட்டு வழுவி அதோகதியாகி விட்டால் மீண்டும் முயல்வது எப்படி ?' என்கிறான் அர்ச்சுனன். அதற்குப் பகவான்,*

न हि कल्पाणकृत् कश्चिद् दुर्गतिं गच्छति ।

என்று விடை கூறித் தைரியப்படுத்துகிறார். அவாவின்மை உண்டாயின், அவரவர்களுக்கு விதிக்கப்பட்டு அவ்வவர் வம்சத்துப், பெரியோர்கள் ஆசரித்த பழக்க வழக்கங்களின்படி நடப்பது எளிதாகும். தான் செய்யும் வினையின் பயனை நுகர்தற்கு விருப்பமும் இராது. அத்தகையோர் கர்ம பலனைக் கருதாது தமக்கு உரிய காரியங்களைச் செய்வார்கள். அவ்வாறு காரியம் செய்வது அரிதாதலின்,

**'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியோர்**
**செயற்கரிய செய்கலா தார்**

என்று திருக்குறள் கூறுகின்றது. அவனே உண்மைச் சந்நியாசி என்று கீதை வற்புறுத்துகின்றது.

अनाश्रित: कर्मफलं कार्यं कर्म करोति य: ।
स संन्पासी च योगी च न निरग्रिर्न चाक्रिय: ।।

அத்தகையோரே உண்மையிலே தவம் செய்வோர்கள். ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து வாடுவதன்று தவம்; அவாவற்றுத் தங்கள் தங்களுக்கு உரிய காரியங்களைச் செய்வோரே தவம் புரிவோராவர்,

**தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்**
**அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு**

என்பது குறள் -

**'மழித்தலும் நீட்டலும் வேண்டா: உலகம் பாடம்**
**பழித்த தொழித்து விடின்'**

என்றும் திருக்குறள் வற்புறுத்துகின்றது.

உலகம் எதனைப் பழிக்கும் என்றால்,

**'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி'**

என்று கூறி, ஒழுக்கத்தினின்று இழுக்குவதையே உலகம் என்று திருக்குறள் அறிவுறுத்துகின்றது. இனி, அவரவர்க்குரிய காரியங்கள் எவை என்னும் வினாவிற்கு இரு நூல்களும் ஒரேவிதமாக விடை பகர்கின்றன.

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -22

பி. ஆர். கண்ணன்

## மங்களசண்டி, மனஸாதேவி

ஸ்ரீபரமேஸ்வரன் த்ரிபுரஸம்ஹாரத்தின் போது சங்கடம் ஏற்படவே, மங்களசண்டியை ஸ்துதித்து, பூஜை செய்து காரியசித்தி பெற்றார். மூலமந்த்ரம், ஸ்தோத்ரம், பூஜாவிதானம் எல்லாம் இங்கு உள்ளன. செவ்வாய் க்ரகம், மனுவம்சத்தில் தோன்றிய மங்களன் என்கிற ராஜா ஆகியோரும் மங்களசண்டியை பூஜை செய்து பயன் பெற்றனர்.

கஸ்யபர் மந்த்ரங்களை ஸ்ருஷ்டித்து, மனஸாதேவியையும், மந்த்ர அதிஷ்டாத்ரு தேவியாக ஸ்ருஷ்டித்தார். கைலாஸத்தில் மனஸாதேவி 1000 திவ்யவருஷம் சிவபூஜை செய்து, சிவன் ஞானம் அருளி, க்ருஷ்ணரின் அஷ்டாக்ஷர மந்த்ர உபதேசம் செய்தார். மனஸா தேவி புஷ்கரக்ஷேத்ரத்தில் மூன்று யுகங்கள் க்ருஷ்ணரை நோக்கி தபஸ் செய்தார். க்ருஷ்ணர், சிவன், தேவர்கள் எல்லோரும் மனஸாதேவியைப் பூஜித்தனர். கஸ்யபர் மனஸா தேவியை ஜரத்காரு என்று பெயரிட்டு, ஜரத்காரு மஹரிஷிக்கு விவாகம் செய்துவைத்தார். ஜரத்காரு மஹரிஷியின் கதை, ஆஸ்திகர் அவர்களுக்குக் குழந்தையாகப் பிறந்தது இந்த விவரங்களை நாம் முன்னர் பரீக்ஷித் கதையின் ஸந்தர்ப்பத்தில் பார்த்தோம். மனஸாதேவி குழந்தையான ஆஸ்திகரை கைலாஸத்திற்கு எடுத்துச் சென்றார். சிவனிடமிருந்து வேதங்களையும், ம்ருத்யுஞ்ஜய மந்த்ரத்தையும் நேரிடையாக உபதேசம் பெறும் பாக்கியம் பெற்றவர் ஆஸ்திகர். பின்னர் ஜனமேஜயரின் ஸர்ப்பஸத்ரத்தை நிறுத்தி இந்த்ரன், தக்ஷக நாகம், ஸர்ப்பவர்க்கத்தையும் ஆஸ்திகர் காத்த தினம் தான் நாகபஞ்சமியாகக் கொண்டாடப்படுகிறது. இந்த்ரன் விசேஷமாக மனஸாதேவியைப் பூஜித்த தினம். மூலமந்த்ரம், ஸ்தோத்ரம், பூஜாவிதானம் எல்லாம் இங்கு உள்ளன.

## ஸுரபி

கோலோகத்தில் ஒரு நாள் க்ருஷ்ணருக்கு பால் குடிக்க ஆசை வந்ததாம். அப்போது அவருடைய இடது பக்கத்திலிருந்து சுரபி கன்றுடன் ஸ்ருஷ்டியானாள். க்ருஷ்ணர் பால் குடிக்கையில் பாத்திரம் உடைந்து பால் சிதறி, பெரிய பால் குளம் கோலோகத்தில் உண்டாயிற்று. பல பசுக்கள் சுரபியிடமிருந்து உண்டாயின. சுரபியின் ரோமங்களிலிருந்து கோபர்கள் தோன்றினர். க்ருஷ்ணரே சுரபி பூஜை செய்தார். ஒருசமயம் மூன்றுலோகங்களிலும் பால் இல்லாமல் போனபோது, ப்ரம்மா ஆக்ஞைப்படி இந்த்ரன் சுரபியைப் பூஜித்து, பால்வளம் கிட்டியது. **நமோ ராதாப்ரியாயை ச பத்மாம்ஸ்யை நமோ நம: ।  நம: க்ருஷ்ணப்ரியாயை**

***ச கவாம் மாத்ரே நமோ நம: ।।*** *ராதாதேவிக்குப் ப்ரியமானவளும், லக்ஷ்மிதேவியின் அம்சமுமானவளும், க்ருஷ்ணருக்குப் ப்ரியமானவளும், பசுக்களின் தாயாருமான சுரபிக்கு நமஸ்காரம். பால் தானே நெய்க்கும், யக்ஞங்களுக்கும் ஆதாரம். மூலமந்த்ரம், ஸ்தோத்ரம், பூஜாவிதானம் எல்லாம் இங்கு உள்ளன. தீபாவளிக்கு அடுத்த நாள் சுரபி பூஜை விசேஷம்.*

***ஸ்கந்தம் 10***

***மனுக்கள் தேவியின் அனுக்ரகம் அடைந்தது***

***ஸ்வாயம்புவமனு***

*ப்ரம்மாவின் மானஸபுத்ரரான ஸ்வாயம்புவமனு ஐம் மந்த்ரஜபத்துடன் 100 வருஷம் ஒற்றைக்காலில் நின்று தபஸ் செய்து, தேவி தர்சனம் பெற்றார். ஸ்ருஷ்டி ஸாமர்த்யம், ஸகலகார்யஸித்தி அருளப்பெற்றார். தேவி விந்த்யாசலம் சென்றாள்.*

*ஒரு சமயம் நாரதர் விந்த்யமலையின் உபசாரம் பெற்று, ஸுமேரு பர்வதத்துடன் ஒப்பிட்டுப் பேசினார். ஸுமேரு மலையை சூர்யன் முதலான நவக்ரகங்களும் ப்ரதக்ஷிணம் செய்கிறார்கள்; சிவபெருமானின் மாமனாரான ஹிமவானின் இருப்பிடம்; சிவனின் வாஸஸ்தலமான கைலாஸத்தின் இருப்பிடம் என்றெல்லாம் ஸுமேரு மலையின் உயர்வைப்பற்றிப் பேசவே, விந்த்யமலைக்கு வெகு பொறாமை ஏற்பட்டது. உடனே விந்த்யமலை உயர்ந்து வளர்ந்து, சூரியனின் கதிக்குத் தடங்கல் விளைவிக்கவே, விந்த்யமலையின் வடக்கு பாகம் தாங்காத உஷ்ணமாகவும், தெற்கு பாகம் ஒரே இருட்டாகவும் ஆயின. ஜீவர்கள் அகாலமரணமெய்தினர். தேவர்கள் விஷ்ணுவைப் ப்ரார்த்திக்கவே, விஷ்ணு அவர்களை காசிக்குச் சென்று, தேவி உபாஸகரான அகஸ்த்யரை வேண்டச் சொன்னார். அகஸ்த்யரும், காசியைவிட்டுப்பிரிய மனமின்றி, துயரத்துடன் கிளம்பினார். லோபாமுத்ரையுடன் வந்த அவர், விந்த்யமலையிடம், தான் தென் திசையிலிருந்து திரும்பும்வரை உயரக்குறைவாகவே இருக்குமாறு உத்தரவிட்டு, மலயபர்வதம் சென்றார்.*

***மற்ற மனுக்கள்***

*ஸ்வாயம்புவமனுவின் புத்ரர் ப்ரியவ்ரதர். அவருடைய புத்ரர் 12 வருஷம் தேவியை நோக்கி தபஸ்செய்து, தேவி க்ருபையினால் ஸ்வாரோசிஷ மனுவாக ஆனார். அவருடைய தம்பி உத்தமரும் 3 வருஷம் தபஸ் செய்து, தேவியின் அருளால் மனுவானார். உத்தமரின் தம்பி தாமஸரும் சைத்ர, ஆஸ்வின நவராத்ரியில் க்லீம் மந்த்ரஜபம் செய்து தபஸினால் தேவியின் அருள் பெற்று மனுவானார். அவருடைய தம்பி ரைவதரும் க்லீம் மந்த்ர உபாஸனை செய்து மனுவானார். அதன்பின் ராஜா அங்கனுடைய புத்ரர் சாக்ஷுஷர் 12 வருஷம் ஐம் மந்த்ரஜபம் செய்து, தேவியின் தர்சனம்,*

அருள் பெற்று, மனுவானார். எல்லா மனுக்களும் இகலோகசுகங்களைத் துய்த்து, கடைசியில் மோக்ஷமடைந்தனர்.

ஏழாவது மனுவான வைவஸ்வதர், ஸ்ராத்ததேவர் என்ற பெயருடன் இருந்தவர், தேவி அனுக்ரகத்தினால் மனுவாகி இப்போது பதவியில் உள்ளார். எட்டாவது மனுவான ஸாவர்ணி, ராஜா ஸுரதனாக இருந்தவர், இங்கும், தேவிமாஹாத்ம்யத்திலும் சொல்லப்பட்டுள்ளது போல, மனுவாக ஆவார். ஒன்பதிலிருந்து, பதினான்காவது வரையிலான மனுக்கள், வைவஸ்வதமனுவின் புத்ரர்கள் அறுவர், யமுனைக்கரையில் கடும் தபஸ் செய்தனர். **மத்யா விமலயா தேஷாம் ஆத்மந்யேவாகிலம் ஜகத் । தர்ஸநம் ஸம்ஜகாமாஸு ததத்புதமிவாபவத் ।।** அவர்களுக்கு ஏற்பட்ட சித்தசுத்தியினால் தன்னுள் இருக்கும் ஆத்மாவே உலகம் முழுவதும் நிறைந்திருப்பதைக் கண்டனர். அது அத்புதமானதே. ப்ராமரீ தேவி தர்சனம் தந்து, அந்த அறுவரையுமே மனுவாக ஆக்கினாள். அவர்கள் தக்ஷஸாவர்ணி, மேருஸாவர்ணி, சூர்யஸாவர்ணி, சந்த்ரஸாவர்ணி, ருத்ரஸாவர்ணி, விஷ்ணுஸாவர்ணி என்ற பெயருடன் திகழ்ந்தனர்.

### ப்ராமரீ தேவி

அருணன் என்ற அசுரன் கங்கைக்கரையில் காயத்ரி மந்த்ர ஜபத்தின் மூலம் கடும் தபஸ் செய்யவே, ப்ரம்மா காயத்ரி தேவியுடன் தர்சனம் தந்தார். அசுரன் வேண்டுதலின்படி, மரணம் யுத்தத்திலோ, புருஷன், ஸ்த்ரீயினாலோ, அஸ்த்ரசஸ்த்ரங்களினாலோ, இரண்டு, நான்கு கால்கள் கொண்ட ப்ராணிகளாலோ ஏற்படாது என்ற வரத்தை அருளினார். வரம் பெற்ற அசுரன் அசுரஸ்வபாவப்படி, தேவர்களையும், ஸாதுக்களையும் துன்புறுத்தினான். சிவனின் ஆக்ஞைப்படி, தேவர்கள் புவனேஸ்வரியை மாயாபீஜ ஜபம் செய்து ஆராதித்தனர். சிவன் மேலும் அசுரன் காயத்ரி ஜபத்தை விட்டால் தான், அவனை ஸம்ஹரிக்க முடியும் என்று சொல்லியிருந்தார். தேவர்கள் ப்ருஹஸ்பதி பகவானை அசுரனிடம் அனுப்பினர். அவர் அருணனிடம் சென்று, எந்த காயத்ரிதேவியை நாங்கள் உபாஸிக்கிறோமோ, அவளையே நீயும் போற்றுவதால், நீயும் எங்கள் பக்கந்தான் என்று சொல்லிக் குழப்பினார். அருணன் உடனே காயத்ரி உபாஸனையை விட்டான். தேவர்களுக்கு வெகுநாள் கழித்து தேவியின் தர்சனம் கிடைத்தது. **ப்ரமரைர்வேஷ்டிதா யஸ்மாத் ப்ராமரீ ஸா தத: ஸ்ம்ருதா ।** ப்ரமரங்கள், அதாவது தேனீக்களால் சூழப்பட்ட தேவி, ப்ராமரீ என்று உபாஸிக்கப்படுகிறாள். தேவி உடனேயே, பலப்பல தேனீக்கள் வடிவம் எடுத்து, ஹ்ரீங்காரம் எடுத்துக் கொண்டு, தேவியைச் சுற்றி இருந்தன. பின்னர் அந்த தேனீக்கள் எங்கெல்லாம் அசுரர்கள் இருந்தனரோ, அங்கு போய் அவர்களை எந்த யுத்தமும் இல்லாமல் ஒரே க்ஷணத்தில் ஸம்ஹாரம் செய்தனர். தேவர்கள் சந்தோஷித்தனர். ப்ரம்மா, விஷ்ணு, தேவர்கள் ப்ராமரீ தேவியைப் பூஜித்தனர்.

# சித்திரை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 16/4/2022 | சனி | சித்ரா பௌர்ணமி |
| 17/4/2022 | ஞாயிறு | ஸ்வாதி வேத பாராயணம் |
| 18/4/2022 | திங்கள் | அனுஷம் தேர் |
| 19/4/2022 | செவ்வாய் | அனுஷம் வேத பாராயணம் |
| 20/4/2022 | புதன் | மூலம் தேர் |
| 21/4/2022 | வியாழன் | மூலம் வேத பாராயணம் |
| 22/4/2022 | வெள்ளி | உத்ராடம் தேர் |
| 23/4/2022 | சனி | உத்ராடம் வேத பாராயணம் |
| 24/4/2022 | ஞாயிறு | அவிட்டம் தேர் |
| 25/4/2022 | திங்கள் | அவிட்டம் வேத பாராயணம் |
| 26/4/2022 | செவ்வாய் | ஏகாதசி |
| 27/4/2022 | புதன் | துவாதசி |
| 28/4/2022 | வியாழன் | ப்ரதோஷ பூஜை |
| 03/5/2022 | செவ்வாய் | அக்ஷய த்ருதியை |
| 06/5/2022 | வெள்ளி | ஸ்ரீ சங்கர ஜயந்தி |
| 12/5/2022 | வியாழன் | ஏகாதசி |
| 13/5/2022 | வெள்ளி | துவாதசி, ப்ரதோஷ பூஜை |
| 14/5/2022 | சனி | ஸ்ரீ நரசிம்ம ஜயந்தி |
| 15/04/22, 22/04/22, 29/04/22, 06/05/22 - 13/05/22 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# Q¸ è n ¯áúº ÷Áuzvß uÛa]Ó¨¦

ஸ்ரீ V.S. சங்கரன்
(மேதாநந்த சங்கர நாராயணன்)
ஓய்வுபெற்ற தமிழ்நாடு பொதுப்பணித்துறை
எக்ஸிக்யூடிவ் இன்ஜீனியர்.

உலக வாழ்விற்கு அச்சாணி போன்ற தர்மங்களுக்கு மூலகாரண மானவை வேதங்களேயாகும். வேதமே நமக்குப் பிரமாணம். வேதவியாஸர் காலத்தில் அதாவது துவாபரயுக முடிவில் அப்போது வழக்கிலிருந்த 1180 வேத சாகைகளையும் ஒழுங்குமுறைப் படுத்தி ஸம்ஹிதை, ப்ராஹ்மணம் உபநிஷத்கள் என்றும், காண்டங்கள், ப்ரச்னங்கள், பதங்கள் என்றும் பிரித்து வரிசைப்படுத்தி, ருக், யஜுர், ஸாம, அதர்வ வேதங்கள் என்று ஸ்தாபித்தார். இவைகளில் மிகச்சில மட்டுமே நம்மிடையே உள்ளன. உள்ள சிலவற்றையும் காப்பாற்றிக் கொடுத்தது நடமாடும் தெய்வமாக இருந்த நமது காஞ்சிப் பெரியவர்கள் தான். அவருக்கு நன்றி சொல்லி யஜுர் வேதத்தின் சிறப்பைப் பற்றிச் சொல்ல முற்படுகிறேன்.

2. கீழ்க்கண்ட பகவத்கீதை ஸ்லோகங்களிலிருந்து, வேதங்கள் வேள்வியில் தான் நிலைத்துள்ளன என்று அறியலாம்.

**அந்நாத் பவந்தி பூதாநி பர்ஜன்யா தந்ந ஸம்பவ: !**
**யஜ்ஞாத் பவதி பர்ஜன்யோ யஜ்ஞ: கர்ம ஸமுத்பவ: ।**
**கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷர ஸமுத்பவம்**
**தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம் ॥**

அன்னத்திலிருந்து உயிர்கள், மேகத்தால் அன்னம், வேள்வியினால் மேகம், கருமத்தால் வேள்வி, வேதத்தால் கருமம், அழிவற்ற பிரம்மத்திலிருந்து வேதம், ஆகையால் எங்கும் பரவியுள்ள வேதம் வேள்வி அதாவது யாகத்தில் நிலைத்திருக்கிறது. இதனால் தான் எல்லா நற்கரும முடிவிலும், ஸ்வஸ்தி வசனம் சொல்லும்போது ''கோ (பசு) ப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம்'' என்று வடமொழியிலும், ''வாழ்க அந்தணர்,

வானவர் ஆனினம்'' என்று சைவத் திருமுறைகளிலும் சொல்லப்படுகிறது. பசுவின் நெய், சாணம் முதலியவை யாகத்திற்கு அவசியமாக வேண்டியவை. யாகங்கள் செய்ய அந்தணர் வேண்டும். பசுவும், ப்ராஹ்மணனும் சுகமாக இருந்தால் தான் யாகங்கள் செய்யமுடியும். அதன் மூலமாக உலகம் சுபிக்ஷமாக இருக்கும். வேள்விகளைச் செய்வதற்கு வேண்டிய மந்த்ரங்களையும், அமைப்புக்களையும் கொண்டது யஜுர் வேதமே. 'யஜ்' என்றால் யாகம் செய்வது என்றும், 'வித்' என்றால் அறிவது என்றும் பொருள்படும். உலக க்ஷேமத்திற்கு இன்றியமையாத யஜுர் வேதம் மிகச்சிறப்பானது என்று சொல்லவும் வேண்டுமோ ?

கிருஷ்ண யஜுர் வேதமானது மற்ற வேதங்களில் இல்லாத தனிச்சிறப்பு ஒன்றைப் பெற்றுள்ளது. 'நம: பலிவாய' என்ற பஞ்சாக்ஷர த்தை உள்ளடக்கிய ஸ்ரீ ருத்ரமும், அதைத் தொடர்ந்து வரும் சமக ப்ரச்னமும், 7 அத்யாயங்களில் நடு அத்தியாயமான நான்காவதில், நடுநாயகமாக பல விலை மதிக்க முடியாத ரத்தினங்கள் உள்ள ஆபரணத்தில் மத்யமணி போல் அமைந்துள்ளது ஆகும். ஸ்ரீ ருத்ரமும், சமகமும் உலகெங்கும் பாராயணம் பண்ணப்படுவது மட்டுமன்றி, அபிஷேக காலங்களில் ஓதப்படுகிறது. உலக க்ஷேமத்திற்காக மஹாருத்ரம் (121 வேத பண்டிதர்கள் 11 ஆவ்ருத்தி) அதிருத்ரம் (121 வேத பண்டிதர்கள் 121 ஆவ்ருத்தி) பாரதமெங்கும் நடத்தப்படுகின்றன. 1994 ஆகஸ்டு மாதம 10ஆம் தேதியிலிருந்து 15ம் தேதி வரை அம்பத்தூரில் மிக விமரிசையாக அதிருத்ரம் நடத்தப்பட்டது. இதில் ''வசோர்த்தாரை'' என்பது சமக மந்த்ரங்களை ஒரே மூச்சில் ஓதி நெய் ஆஹுதியாக இடைவிடாமல் செய்வது ஆகும். இது ஒரு சிறப்பு அம்சம், மேலும் கங்கையில் ஸ்நானத்தால் கூட தீராத சில பாபங்கள் உண்டு. அவைகள் மஹாப்ராயச்சித்தமான ருத்ர ஏகாதசினீயால் நிவர்த்தியாகின்றன என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ருத்ர ஏகாதசினீ என்பது 11 வேத விற்பன்னர்கள் 11 தடவை ருத்ரத்தையும், ஒரு தடவை சமகத்தையும் பாராயணம் செய்து ருத்ர ஹோமமும், வசோர்த்தாரை செய்வதாகும். பெரும்பாலும் ஷஷ்டியப்த பூர்த்தியிலும், சதாபிஷேகத்திலும் இது அநுஷ்டிக்கப்படுகிறது. மேலும் நமக்கு விதிக்கப்பட்ட 40 ஸம்ஸ்காரங்களில் செய்யப்படும் பாந்தி ஹோமங்களில் பயன்படும் மந்த்ரங்களில் மிகப் பெரும்பாலானவை யஜுர் வேத மந்த்ரங்களேயாகும்.

4. வாழ்நாள் முழுதும் ஸ்ரீ ருத்ரம் ஒன்றையே ஓதி ஸ்ரீ ருத்ர பசுபதி நாயனார் (இவர் 63 சைவ நாயன்மார்களிலே ஒருவர்) என்பவர், திருச்சி மாவட்டத்தில் முசிறிக்கு அருகே திருத்தலையூர் என்னும் தலத்தில் முக்தி பெற்றார் என்றால் ஸ்ரீ ருத்ரத்தின்

பெருமையையும், அது அமைந்திருக்கும். கிருஷ்ண யஜுர் வேதத்தின் பெருமையையும் என்னவென்பது !

5. ‘ஸஹநாவவது’ என்ற பிரார்த்தனையுடன் தொடங்கும் கிருஷ்ண யஜுர் வேதத்தில், 108 உபநிஷத்துகளில் 32 உள்ளன. அவை கதா, தைத்திரீயக, ப்ராஹ்ம, கைவல்ய, ஸ்வேதாஸ்வதார, கர்ப்ப, நாராயண, அம்ருதபிந்து, அம்ருதநாத, காலாக்னி ருத்ர, க்ஷுரிகா, ஸர்வஸார, சுகரஹஸ்ய, தேஜோபிந்து, த்யானபிந்து, ப்ரஹ்ம வித்யா, யோக தத்வ, தக்ஷிணாமூர்த்தி, ஸ்கந்த, ஸாரீரக, யோக சிகா, ஏகாக்ஷர, அக்ஷி, அவதூத, கடருத்ர, ருத்ர ஹ்ருதய, யோக குண்டலினீ, பஞ்ச ப்ரஹ்ம, ப்ராணாக்னிஹோத்ர, வராஹ, கலிசந்தரண, ஸரஸ்வதி ரஹஸ்ய உபநிஷத்துகள் ஆகும். இவைகள் பல தர்மங்களையும், ஸம்ஸ்காரங்களையும், உபாஸனா மார்க்கங்களையும், ப்ரஹ்ம வித்யையால் முக்தி அடையும் வழிகளையும் கூறுகின்றன. இவைகளிலிருந்து, ஒருவன் பிறப்பிலிருந்து செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்கள், யாகங்கள், இஷ்டா பூர்த்தங்கள் முக்தி அடையும் வழி எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பெரும் கருவூலமாக இவ்வேதம் இருப்பது வெளிப்படையான ஒன்று.

6. யஜுர் வேதமானது வைசம்பாயனரிடமிருந்து முறையே யாஸ்கர், தித்திரி, உகர், ஆத்ரேயர் என்ற மகரிஷிகளுக்கு வந்தது. தித்திரி மஹரிஷியின் பேரை வைத்துத்தான் நம் சாகையை தைத்திரீய சாகை என்கிறார்கள். ஆத்ரேயர் காலத்திற்கு முன் ஸம்ஹிதை பாடம் மட்டும் பிரசாரத்தில் இருந்தது. ஆத்ரேயர் பத பாடமும், க்ரம பாடமும் ஏற்படுத்தினார். ஜடா பாடம் வியாஸராலும், பாடம் சௌண்டின்ய மஹரிஷியாலும் ஏற்படுத்தப்பட்டது. இந்த வகையான பாடங்கள் வேத மந்த்ரங்கள் பிழைபடாமல் பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு இருந்த அதே அமைப்பில் பாடபேதம் இன்றி இப்போதும் ஓதுவதற்கு வழிசெய்கின்றன. க்ரம பாடம் என்பது 1, 2, பதங்களைச் சொல்லி, அதன் பிறகு முதல் மதத்தை விட்டு 2, 3, பதங்கள் சொல்லி, பிறகு 2வது பதத்தை விட்டு விட்டு 3,4, என்று ஓதுவது ஆகும். அதன் அமைப்பு 1, 2-2, 3-3, 4-4, 5-5, 6-6, 7-7, 8-8, 9-9, 10 ஆகும்.

8. ஜடை என்பது இரண்டு பதத்தை வைத்துக்கொண்டு நேராகவும், தலைகீழாகவும் மறுபடியும் நேராகவும் சொல்வது. அதன் அமைப்பு 1, 2-2, 1-1, 2 ஆகும்.

9. கனம் என்பது முதலில் 2 பதத்திற்கு ஜடை சொல்லி 3வது பதத்தையும் சொல்லி, 3

முதல் 1 வரை தலைகீழாகச் சொல்லி, மறுபடி 1 முதல் 3 வரை சொல்வது ஆகும். அதன் அமைப்பு 1,2,2,1-1,2,3-3,2,1-1,2,3 ஆகும். கனம் சொல்லத் தெரிந்தவர்களை கனபாடிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். யஜுர் வேதத்தில் க்ரமம், ஜடை, கனம் என்ற பாடங்கள் முழுமையாகவும், கம்பீரமாகவும், சிறப்பாகவும் அமைந்துள்ளன.

10. கிருஷ்ண யஜுர் வேதத்தில் இன்னொரு சிறப்பும் உண்டு. ‘கல் வைத்த வாரம்’ என்று ஒரு கடினமான பரீட்சை. வேத பண்டிதர்கள் குழுமியுள்ள சபையில் சிறு கற்களை வைத்து, அதை யாராவது ஒருவரை விட்டு எடுக்கச்சொல்லி காண்டம், ப்ரச்னம், பதம் இவைகளை அதில் வரும் எண்ணிக்கைப்படி ஆரம்பிக்கச் சொல்லி, அந்தப் பதத்திலிருந்து தடையில்லாமல் ஸ்வரத்துடன் 250 பதங்கள் சொல்ல வேண்டும். நன்றாக மனனம் தொடர்ந்து பாராயணம் செய்பவர்களுக்குக்கூட குறிப்பிட்ட பதம் எது என்று அறிந்து அதைத் தொடர்ந்து 250 பதங்கள் சொல்வது கடினம். இப்படிப்பட்ட ‘கல் வைத்த வாரம்’ அம்ரத்தூரில் அதிருத்ர விழாவில் 14-8-94 அன்று நடந்தது. அம்பத்தூரை சேர்ந்த புதூரில் உள்ள ஸ்ரீ நாகராஜ கனபாடிகள் முதல் பரிசைப் பெற்றார்.

11. ‘தஸ்ய யஜுரேவ ஸிர: ருக்தக்ஷிண: பக்ஷ: ஸாமோத்தர: பக்ஷ:’ என்ற வாக்கியத்தின்படி 4 வேதங்களும் ஒரு பக்ஷியாக உருவகப்படுத்தப்பட்டு, அதில் யஜுர் வேதம் ’சிரசு’ என்று அறிவுறுத்தப்படுகிறது. எல்லா உறுப்புகளிலும் சிரசே பிரதானம் அல்லவா? ஆகையால் யஜுர் வேதம் வேதங்களில் ‘சிரசு’ ஸ்தானத்தை வகித்துச் சிறப்புப் பெறுகிறது என்று சொல்லி இந்தக் கட்டுரையைப் பூர்த்தி செய்கிறேன்.

ஸஹ நா வவது । ஸஹ நௌ புனக்து । ஸஹ வீர்யம் கரவாவஹை ।

தேஜஸ்வி நா வத்தமஸ்து மா வித்விஷாவஹை ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

# ப்ரபோத சிந்தாமணி

ஆயுஷ்மன்

மாணவர்கள் பலர் bus day கொண்டாடுகிறார்கள். பேருந்தில் பயணிப்பவர்கள் பாடு திண்டாட்டம்தான். இன்னும் சில கல்லூரிகளில் ரயில் பயணங்களில் வன்முறை தலைவிரித்து ஆடுகிறது. கோஷம் செய்து கொண்டு அடிதடியில் இறங்கி போலீஸ் வழக்குவரை போய்விடுகிறது. மாணவர்கள் நல்லவர்கள்தான். சரியான வழிகாட்டல் இல்லை. போறாதத்திற்கு அரசியல் காட்கள் தூண்டுதல் வேறு. மாணவப் பருவம் ஒரு பொன்னான காலம். அதை வீணாக்கக் கூடாது.

**''ஸுகார்த்தினோ குதோ வித்யா வித்யார்தினோ குதோஸுகம்''** ஸுகத்தை எதிர்பாப்பவனுக்கு எப்படி கல்வி வரும்? கல்வியை எதிர்பார்ப்பவனுக்கு எப்படி ஸுகம் வரும்? என்று சாஸ்த்ரங்கள் கூறும். கல்விக்குத்தான் மாணவர்கள் முக்யத்வம் தர வேண்டும். அரசியல் வேண்டவே வேண்டாம். சுதந்திரப் போராட்டத்தில் மாணவர்கள் பங்கு இருந்தது என்பது வேறு விஷயம். தேசப்பற்று இருந்த காலமது. இப்போது அப்படி இல்லை. எந்த கட்டுப்பாடுமின்றி குறிக்கோளுமின்றி வீணாகக் காலம் கழிக்கின்றனர் நம் மாணவர்கள். ஜகத்குருவாகிய க்ருஷ்ண பரமாத்மா கீதையில் ஓர் உபதேசம் அருளியுள்ளார். அது இவர்களுக்குப் பொருந்தும்.

**ஸ்ரத்தாவான் லபதே ஞானம் தத்பர: ஸம்யதேந்த்ரிய:**

**ஞானம் லப்த்வா பராம் சாந்திம் அசிரேணாதிகச்சதி'' 4-39**

ஸ்ரத்தையுள்ளவனும், லக்ஷியத்தில் தீவிரமாக இருப்பவனும், புலனடக்கம் உள்ளவனும் ஞானத்தை அடைகிறான். அப்படிப்பட்டவனே சாந்தியை வெகு சீக்ரம் அடைகிறான்.

இது ப்ரம்ம ஞானத்தை அடைவதற்கு கூறப்பட்ட ஸ்லோகம் எனினும் லௌகிகத்திற்கும் பொருந்தும். சரி க்ருஷ்ணர் என்ன கூறுகிறார்?

மாணவனுக்கு மூன்று கடமைகள்

1. ஸ்ரத்தையுடன் படித்தல், ஏனோதானோ என்று கற்கக் கூடாது.

2 தத்பரனாக இருத்தல், தன் லக்ஷியத்தில் தீவிரமாயிருத்தல், வேறு நாட்டங்களுக்குத் தன்னை ஈடுபடுத்தலை தவிர்க்க வேண்டும்.

3.புலனடக்கம் உள்ளவனாயிருத்தல், கீழான நடத்தைகளைத் தவிர்க்க வேண்டும்.

மாணவர்களை அலைக்கழிக்க பல சாதனங்கள் உள்ளன. அவைகளில் மிகுந்த ஈடுபாடு கொள்ளாமல் இருத்தல் அவஸ்யம்.

மேற் சொன்ன மூன்று விஷயங்களையும் நாசமாகுவதற்குத்தான் இக்காலப் படிப்பு உள்ளது. அதன் மாய வலையில் சிக்காமல் மாணவன் வருவது அபூர்வம்.

மேற்சொன்ன விஷயங்களுக்கு தடைகளாக உள்ள சாதனங்களை புரிந்து அளவோடு அவைகளைப் பயன்படுத்தினால் மாணவர்களது எதிர்காலம் ப்ரகாசமாயிருக்கும். சிறந்த மாணவர்களாக உருவாகலாம். தேவை அவர்களுக்குப் ப்ரபோதம்.


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

விஸ்வனாத ஐயர் கணபதி - கோ



பெரியவாளின் அருள்மழையில் நனைந்து திளைத்து அவருடைய கருணைக்குப் பாத்ரமானதிற்கு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். ஒரு நாள் என் அகத்தில் இரண்டு பேர்களை வைத்து வேத பாராயணம் செய்யப் பணித்தார்.

நானும் அவ்விதமே செய்தேன். அதன் பிறகு ஒரு நாள் ‘‘மாயவரத்திலிருந்து ஒரு ஸாஸ்த்ரிகள் வந்திருக்கிறார். அவரை என் ஸன்னிதானத்தில் பாராயணம் செய்யச் சொல்கிறேன் ஸம்பாவனையைச் செய்வாயா? என்று கேட்க நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன்.

பெரியவா பின்பு கலவைக்கு வந்திருந்தார். நான் அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

அவர் உள்ளேயிருந்தார். பார்க்க முடியவில்லை. கிணற்றின் அடியில் ஸ்ரீகண்டன் ஸ்நானம் செய்துகொண்டிருந்தார். நானும் அவரும் பாராயணம் முறைப்படி நடக்க வில்லை போலிருக்கிறதே நடு நடுவே தடைகள் ஏற்படுகிறதே என்று ஆதங்கப்பட்டோம். பூஜை முடிந்தவுடன் ஸ்ரீகண்டன் பெரியவாளிடம் நான் வந்திருப்பதாகச் சொன்னார். அவர் தர்சனம் தரவில்லை, பார்க்கவுமில்லை. ஏமாற்றத்துடன் நான் காரில் படுத்திருந்த போது ஸ்ரீகண்டன் பெரியவா கூப்பிடுவதாகச் சொல்ல நானும் சென்று வந்தனம் செய்தேன்.

*பெரியவா என்னைப் பார்த்து தீக்ஷிதருக்கு ஸம்பாவனைத் தான் செய்யச் சொன்னேன். அது நடக்கிறதோல்லியோ'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார். நான் என் தவறை உணர்ந்தேன்.*

*அதற்குப் பிறகு காமாக்ஷி அம்மனுக்கு கும்பாபிஷேகம் நடந்தது. அம்பாளுக்கு இரண்டு நெக்லஸ் வாங்கி இவைகளில் எது பெரியவாளுக்குப் பிடிக்குமோ அதை சார்த்துகிறேன். இன்னொன்றை திருப்பிவிடுகிறேன் என்று கூறினேன். பெரியவா எதுவும் சொல்லவில்லை. மௌனமாகிவிட்டார்கள்..உடனே பாலு உங்கள் இஷ்டம் போல் ஒன்றை அம்பாளுக்கு சமர்ப்பியுங்கள் இன்னொன்றைத் திருப்பிவிடலாம் என்றார்கள். நானோ இரண்டையும் அம்பாளுக்குச் சமர்ப்பித்துவிட்டேன். பெரியவா காதிலும் போட்டுவிட்டேன்.*

*கும்பாபிஷேகம் நடந்தபின் மூன்றாம் நாள் என்னுடைய அபிஷேக முறை. பெரியவா காஞ்சிக்கு வந்து கொண்டிருந்தார்கள். அய்யங்கார்குளத்தில் அவரைப் பார்த்தேன். என்னைப் பார்த்து சிரித்து '' நான் மௌனமாகிவிட்டதால் அம்பாளுக்கு இரண்டு நெக்லஸ் கிடைத்ததா'' என்று வினவினார். இம்மாதிரி பல சமயங்கள் அவருடைய கருணைக்குப் பாத்ரமானேன். என்னே என் பாக்யம்!*

*(வளரும்)*

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

பௌராணிகர் வழக்கம் போல் கதை சொல்ல ஆரம்பித்தார். கேளிக்கைகள் அளவுக்கு மீறி செய்யப்பட்டால் எந்தவிதமான அனர்தம் ஏற்படும் என்று இந்தக் கதை விளக்கும் என்று தொடங்கினார்.

யாதவ வம்சத்தில் இருந்தவர்கள் எப்போதுமே அதீதமான கேளிக்கைகளில் ஈடுபடுவார்கள். த்வாரகையில் இருந்த இளைஞர்கள் ஒரு சமயம் கடற்கரைக்குச் சென்று அதீதமான கேளிக்கைகளில் ஈடுபட்டனர். இதில் எல்லா மக்களும் சேர்ந்து விட ராஜதானியை காக்க மறந்தனர். அந்த சமயம் பார்த்து நிகும்பன் என்னும் அரக்கன் ராஜகுமாரி பானுமதியை கடத்திச் சென்றுவிட்டான். அவள் போட்ட கூக்குரலில் உக்ரசேனர் ஓடிவந்து உண்மை நிலையை உணர்ந்தார். நிகும்பனை எங்கு தேடியும் காணவில்லை. அவர் உடனே க்ருஷ்ணரிடம் முறையிட அவரும் ப்ரத்யும்னனுடன் நிகும்பனைத் தேடினார். அவன் கிடைக்கவில்லை. அவன் கபடமாக அவனுடைய தம்பி வஜ்ர நாபனின் ஊரான வஜ்ரபுரத்தில் தஞ்சம் அடைந்தான்.

இவர்கள் தெரியாமல் மூவருக்கும் அவன் தன் மாயையினால் ஒவ்வொரு இடமாக மாறி மாறி போய் கொண்டிருந்தான். இறுதியில் கோகுமா என்னும் இடத்தை அடைந்தான். அது மஹாதேவரால் ரக்ஷிக்கப்பட்ட இடம். நிகும்பன் பானுமதியுடன் வந்தவுடன் நிலை தடுமாறி கீழே விழுந்து மயக்கமடைந்தான். இதைக் கண்ட ப்ரத்யும்னன் பானுமதியை த்வாரகைக்கு அழைத்துச் செல்ல அர்ஜுனனும், க்ருஷ்ணனும் நிகும்பனுடன் போரிட ஆரம்பிக்க அவனும் மீண்டும் தன் மாயா யுத்தத்தை செய்து ஒரு குகையினுள் போய் ஒளிந்துகொண்டான். அவன் வரும் வரை இருவரும் குகையின் வாயிலைக் காத்து நின்றனர்.

மறு நாள் மீண்டும் வெளியே வந்த நிகும்பன் அதி பயங்கரமாக யுத்தம் செய்தான். அர்ஜுனனும், க்ருஷ்ணரும் பதிலுக்குத் தாக்கினர். தன் மாயா யுத்தத்தால் நிகும்பன் அர்ஜுனனையும் க்ருஷ்ணரையும் வீழ்த்த இந்தரன் முதலானோர் கங்கா ஜலம் கொண்டு அவர்களை எழுப்பும் அளவுக்கு யுத்தம் நிகழ்ந்தது. வீறு கொண்டு எழுந்த அர்ஜுனன் அவனை பலமாகத் தாக்கினான். தன் மாயையினால் அரக்கன் ஆயிரம் நிகும்பனாக

தோன்றி அவர்களை அலைக்கழித்தான். அர்ஜுனன் எது உண்மையான நிகும்பன் என்று திகைக்க க்ருஷ்ணர் தன் சுதர்சன சக்ரத்தால் உண்மையான நிகும்பனது தலையைச் சேதிக்க யுத்தம் முடிந்தது.

த்வாரகைக்கு அவர்கள் திரும்பி வந்தனர். பானுமதியின் தந்தை தன் புதல்விக்கு இப்படி ஒரு களங்கம் ஏற்பட்டதே என்று மனம் வருந்தினார். அப்போது அங்கே வந்த நாரத முனிவர் முன்பு ஒரு சமயம் துர்வாச முனிவரை அவள் அவமரியாதை செய்ததன் விளைவு இந்த நிகழ்ச்சி. இருப்பினும் அவளது முறையீட்டுக்கு ஏற்ப அவள் கடத்தப்படுவாளே தவிர களங்கப்படமாட்டாள் என்று துர்வாஸர் கூறினார். பின்பு அர்ஜுனனும், க்ருஷ்ணரும் அரசனை சமாதானம் செய்வித்து பானுமதியை சஹதேவருக்கு மணம் முடிக்க இணங்க வைத்தனர். ஸஹதேவன் த்வாரகைக்கு வந்து அவளை திருமணம் செய்து கொண்டான். இறுதியில் நல்லது நடந்தது என்றாலும் கேளிக்கைகளில் அதீதமாக ஈடுபடக் கூடாது என்று கூறி பௌராணீகர் ஓய்ந்தார்.

(ஹரிவம்சம்)

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள்
பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட
நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி
உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள்
ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

## ஸ்ரீ க்ருஷ்ணனின் தூத வாக்யம்



தனக்குப் பிடிக்காத பேச்சை செய்வியுற்ற துர்யோதனன் யசஸ்வியான வாஸுதேவரைப் பார்த்துச் சொன்னான்.

துர்யோதனன் க்ருஷ்ணர் பாண்டவர்கள் பக்கம் ஒருதலைப் பக்ஷமாக இருப்பவர்.

மேலும் காரணமில்லாமல் பீஷ்ம த்ரோணாசார்யர்கள் கூட என்னை நிந்திக்கிறீர்கள். பாண்டவர்களை ஒன்றும் சொல்வதில்லை. என்னுடைய பக்ஷத்தில் எதையும் மீறியதாக நான் பார்க்கவில்லை.

தேவர்களாலும் பீஷ்மத்ரோண கர்ண க்ருப சமூகத்தை வெல்ல முடியாத போது பாண்டவர்கள்ளால் எப்படி ஸாத்யமாகும்?

அவர்களுக்குத் தலை வணங்குதல் செய்யோம், அதனால் வீர ஸ்வர்கம் செல்வோம். யாரும் எம்மை நிந்தியார். மேலும் நான் ஜீவித்திருக்கும் வரை தந்தையால் கொடுக்கப்பட்ட ராஜ்யத்தை பாண்டவர்கள் பெறார். கேசவரே ஊசிமுனையின் நுனி அளவு நிலம் கூட பாண்டவர்களுக்கு ஈயேன்.

இப்படி பேசின துர்யோதனைப் பார்த்து சிரித்துக் கொண்டே க்ருஷ்ணர் கூறினார்.

க்ருஷ்ணர் : ஹே துர்யோதனா ! பெரும்போர் மூளப்போகிறது. வீர மரணத்தை நீ அடைவாய் ஐயமில்லை. உன் ஆலோசகர்களுடன் ஸ்திரமாக இரு. இதைக் கேட்ட துர்யோதனன் மிகவும் கோபம் கொண்டு பாம்பு போல் பெருமூச்சு விட்டுக் கொண்டு சபையை விட்டு வெளியேறினான். க்ருஷ்ணர் அவன் போவதைப் பார்த்து அவையினரைப் பார்த்து பேசலானார்.

க்ருஷ்ணர் : குருவம்ச முதியோர்கள் இந்த மிதியிலையை அடக்க எந்தப் ப்ரயத்னமும் செய்யவில்லை என்பது வெட்கமாயுள்ளது. அரசனே மற்ற க்ஷத்ரியர்கள் மரணத்தைத் தழுவதிலிருந்து உன் மகனைக் கட்டுப்படுத்து. இதைக் கேட்ட த்ருதராஷ்டிரன் தர்மவான் விதுரரிடம் கூறினான்.

த்ருதராஷ்டிரன் : விதுரா, நண்பா போய் காந்தாரியை அழைத்து வா. இவனை வழிக்குக் கொண்டு வருகிறேன். விதுரரும் காந்தாரியை சபைக்கு அழைத்துவர அரசன் கூறலானான் த்ருத்ராஷ்டிரன் காந்தாரி உன் புத்ரன் சபையை விட்டு வெளியே போய் விட்டான். சபையை அவமதித்துவிட்டான்.

காந்தாரி : ராஜ்ய காமனான துர்யோதனனை இங்கே அழைத்து வாரும். அமைதிக்காக நான் கூறுகிறேன். துர்யோதனா கேள். உன் பிதாவும் இங்குள்ள முதியோர்களும் எந்த வார்த்தையைக் கூறினார்களோ அதைக் கேள். உனக்கும் நம் எல்லாருக்கும் எது நன்மையோ அதைக் கண்ணன் கூறினான். அதன்படி பாண்டவர்களுக்கு பாதி ராஜ்யத்தைத் தந்து சுகமாய் இரு. பத்யமான நல்ல வார்த்தையை அவமதித்து மீண்டும் தன் நண்பர்களுடன் அவன் வெளியேறினான். அவர்களுடன் ஆலோசித்து கண்ணனைக் கட்டிவிட தீர்மானித்தான். இதை உணர்ந்த தீர்க்கதர்சியான விதுரர் த்ருதராஷ்டிரனிடம் இதைத் தெரிவித்தார். துர்யோதனன் சபையில் நுழைந்தவுடன் அரசன் யாராலும் வெல்ல முடியாத க்ருஷ்ணா உன்னைக் கட்டிப் போட என் மகன் இச்சிக்கிறான் என்று கூற க்ருஷ்ணர் கூறினார்.

க்ருஷ்ணர் அடி முட்டாளே துர்யோதனா ! நான் தனி ஆள் என்று நினைத்து என்னை கட்டிப் போட நினைக்கிறாய். என்னில் பாண்டவர்களும், தேவர்களும், கந்தர்வர்களும் ருத்ரர்களும் வஸுக்களும் இருப்பதைப் பார்.

இப்படி சொல்லி மாபெரும் சிரிப்பு சிரித்தான் கண்ணன். அப்போது அவரிடமிருந்து மின்னல் ஆயிரம் தோன்றியது, மேலே சொன்ன தேவர்களும் ரிஷிகளும் வெளிப் போந்தனர். அதைக் கண்ட சபையினர் மிரண்டு கண்களை மூடிக் கொண்டனர். அவர்களுக்கு திவ்ய த்ருஷ்டியை அவர் கொடுக்க அஞ்சலி பத்தராய் அவரை நமஸ்கரித்தனர். பின்பு அவர் தன் விஸ்வரூபத்தை அடக்கிக் கொள்ள த்ருதராஷ்டிரன் பேசலுற்றான்.

(தொடரும்)



ஆசார்யாள் வேதாந்தத்தையும் சொல்லி, பக்தியும் சொல்லி, ஸதாசாரத்தையும் சொல்லி, ஒரு மனிதனுடைய Life-க்கு ஜீவனத்துக்கு - ஒரு guidance, balance-ஸா Material life-ல இருக்கிறவங்களுக்கும் சரி, Philosophy -ன்னு நினைக்கிறவங்களுக்கும் சரி மனிதர்களுடைய தராதரம் தெரிஞ்சி, மனிதர்களுடைய சக்தியை தெரிஞ்சி, மனிதர்களுடைய கோரிக்கைய தெரிஞ்சு- ஒரு எட்டு வயஸுலேர்ந்து. முப்பத்தி ரெண்டு வயதிற்குள்ள இந்த உலகத்த பத்தி புரிஞ்சிண்டு, உலகத்துக்காக பரிஞ்சிண்டு- எல்லாருக்கும் அவர் ப்ரார்த்தனை பண்றார்.

இந்தியாவை பொறுத்த வரைக்கும், மரத்த பாத்தாலும், தர்மம் ஞாபகத்துக்கு வரும். நதியை பாத்தா, தர்மம் ஞாபகத்துக்கு வரும். செடி கொடிய பாத்தா, தர்மம் ஞாபகத்துக்கு வரும். சாப்பாட்லையும் தர்மம் ஞாபத்துக்கு வரும். எல்லா விதத்துலையும், தர்மம், பக்தி, ஸாத்வீகம், ஸதாசாரம், த்யாகம், இத உணர்த்தியிருக்காங்க.

விபூதி இட்டுக்க வேணாம், குங்குமம் இட்டுக்க வேணாம், அப்டீன்னு அர்த்தமில்ல. எல்லாத்திலேயும் நாம பண்ணணும், அதுல ஆசையில்லாம பண்ணணும். வேற லௌகீகமான காமனையில்லாம, ஈச்வரார்ப்பண புத்தியோட பண்ணணும்-னு அர்த்தம்.

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ

## 213. கேள்வி : மனிதன் எதையெல்லாம் செய்யலாம்? எதையெல்லாம் செய்யக் கூடாது ?




**பதில் :** 36. அதிகமாயும் அதி சப்தத்துடனும் சிரிக்கக் கூடாது

37. மீசையைக் கடிக்கக்கூடாது
38. சூன்யமான வீட்டில் வசிக்கக் கூடாது
39. சூன்யமான காட்டில் தனியாகப் போகக் கூடாது.
40. எழுந்தவன் வெகு காலம் நிற்கக் கூடாது
41. உறங்குவது, விழிப்பது, நிற்பது, உட்காருவது, படுத்திருப்பது, தேகப் பயிற்சி செய்வது இவைகளை அதிகமாய்ச் செய்யக் கூடாது.
42. பற்களுள்ளதும், கூரான கொம்புகள் உள்ளதுமான விலங்குகளின் அருகில் செல்லக் கூடாது.
43. தாழ்ந்தவனிடத்திலும், உயர்ந்தவனிடத்திலும் விரோதம் கூடாது.
44. இளம் வெயில், பனி, கீழ்க் காற்று இவைகளைத் தவிர்க்க வேண்டும்.
45. விவாஹமும், விவாதமும் ஸமமுள்ளவருடனே செய்யப்பட வேண்டும்.
46. ஸ்த்ரீகளை அவமதிக்கவும் கூடாது, நம்பவும் கூடாது.
47. ஆகாயத்தையோ, பக்கங்களையோ பார்த்துக் கொண்டே திரியக் கூடாது
48. நுகத்தடி அளவுள்ள பூமியைப் பார்த்துக் கொண்டே நடக்க வேண்டும்.
49. வண்ண வஸ்த்ரங்களை தரிக்கக் கூடாது.
50. பகலில் வஸ்த்ரத்தால் தலையைச் சுற்றிக் கொள்ளல் கூடாது
51. கன்று ஊட்டும்போது பசுவினருகில் செல்லக் கூடாது.
52. ஒருவனையும் இவன் என் எதிரி என்று சொல்லக் கூடாது.

53. காரணமின்றி மீசை தாடி வளர்க்கக் கூடாது.

54. ஆடை அலங்கோலமாயிருக்கும் அன்ய ஸ்த்ரீயைப் பார்க்ககூடாது.

55. மண்கட்டியை உடைத்தல், நகங்களால் கீறுதல், அங்கங்களைச் சொடுக்குதல் இவைகளை காரணமின்றிச் செய்யக் கூடாது.

56. ஒரு குலத்தினின்று இன்னொரு குலத்திற்கு புத்ரனாய் போகக் கூடாது.

57. வரிக்கப்படாமல் தனத்திற்கு ஆசைப்பட்டு யாகங்களுக்குப் போகக் கூடாது.

58. எங்கு உட்கார்ந்தால் எழுப்பப்படுவோமோ அங்கு உட்காரக் கூடாது.

59. இரவில் வழி நடக்கக் கூடாது.

60. பகலில் தூங்கக் கூடாது.

61. ப்ராம்மணன், அரசர், வயதானவர், யதிகள் ஆகியோரை நிந்திக்கக் கூடாது.

62. நாற் சந்தியில் நிற்கக் கூடாது.

63. இரவில் துணையில்லாமல் போகக் கூடாது.

64. சிறைச் சாலை, தன ஆகாரம், கொலை செய்யுமிடம், நகர பாலர்களின் இருப்பிடம் இங்குச் செல்லக் கூடாது.

65. வ்யாதி சிறிதளவு இருப்பினும் அலக்ஷ்யம் செய்யக் கூடாது.

66. கஷ்டமான காலத்திலும் பிறர் பொருளை விரும்பக் கூடாது.

67. கஷ்டமான காலத்திலும் யதா சக்தி தானம் செய்ய வேண்டும்.

68. உண்ணத்தகாததை ஒருகாலும் உண்ணக் கூடாது.

69. புதிதான நடத்தையை ஆரம்பிக்கக் கூடாது.

70. உயிர் போகும் காலத்திலும் தகாத செயலைச் செய்யக் கூடாது.

(தொடரும்)